# தென்றல்

★★★★★★★ கிழமை இதழ் ★★★★★★★

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, பங்குனி 26 (8-4-'61) சனிக்கிழமை | இதழ் 42


## இலங்கையிலே நடப்பது என்ன ?

ஈழ மணித் திருநாடு-எழில் குலுங்கும் சுவர்க்க பூமி. மறத் தமிழ் மன்னன் இராவணன் ஆண்ட வீரத் திருவிடம். மேனாட்டினரும் கீழ் நாட்டினரும் இன்ப உலகம் இதுவெனப் புகழும் பொன்னாடு. புத்த தர்மம் தழுவியசாந்த பூமி. இன்று:—

குமுறும் எரி மலையாய் !

கொந்தளிக்கும் பெருங் கடலாய் !

சுழன்று வீசும் சூறைக் காற்றிலகப்பட்ட துரும்பாய்த் துயர்ப்படுகிறது. அங்கு வாழும் மக்கள்- சிங்களர்- செந்தமிழர், முஸ்லீம் பெருங்குடி மக்களனைவரும் அமைதியைக் காணமுடியாதவராக அல்லற்படுகின்றனர். பொருளாதாரமுடையும், வகுப்புவாதப் பெருங் கனலும், அறியாமையும், அந்தகாரமும் மக்களை வாட்டி வதைக்கின்றன. இத்தனைக்கும் காரணமாக அமைந்த ஒன்று, இலங்கையின் அரசியல் அடிப்படைச் சட்டத்தின் அந்தரங்கத்தில் மறைந்துளது. அதுதான் ஒற்றையாட்சிச் சட்டம்!

இலங்கை சுதந்திரமடைந்தது 1948-ம் ஆண்டில்; இந்தியத் துணைக் கண்டத்துக்குச் சுதந்திரம் கிடைத்ததன் எதிரொலி போன்று, எத்தகைய தியாகப் போராட்டமுமின்றி, இலங்கை சுதந்திரம் பெற்றது. அந்தச் சுதந்திரம் வெள்ளைக்காரர்களின் விருப்பப்படி அமைந்த ஒற்றையாட்சிச் சட்டத்தின் மீதே அமைந்தது.

பல்வேறு சிறுபான்மையினங்கள் வாழும் நாடுகளுக்கொவ்வாத இந்த ஒற்றையாட்சிச் சட்டத்தை அளித்ததன் மூலம் பிரிட்டிஷ்காரர்கள் இலங்கைப் பெரும்பான்மை யினத்தலைவர்களை (சிங்களவரை)த் திருப்திபடுத்தித் தமது காலனி ஆட்சி முறைக்குப் புதிய போர்வையில் ஆதரவுதேடிக்கொண்டனர்.

சிங்கள வகுப்புவாதத்தலைவர்களுக்கு இந்த ஒற்றையாட்சிச் சட்டம் பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது. சுதந்திரம் பெற்ற பின்னருங்கூட இந்த ஒற்றையாட்சிச் சட்ட மூலவரான சோல்பரிப் பிரபு என்பவரே முதற் 'கவர்னர் ஜெனரலாகப்' பதவி வகித்தார் என்றால் சொல்ல வேண்டுமா? வெள்ளை ஏகாதிபத்திய வாதிகளுக்கும் சிங்கள வகுப்புவாதத் தலைவர்களுக்குமிடையேயிருந்த ஒற்றுமையை !

இந்த அரசியல் வஞ்சனைகளுக்குப் பின்னர் இலங்கையின் அதிபதிகள் சிங்களவரே என்ற எண்ணம் சிங்களப் பாமரமக்களிடையேயும், வகுப்புவாத அரசியல் தலைவர்களிடையேயும் வேரூன்றிவிட்டது பலமாக! அதன் பயனாக

★ நாவேந்தன் ★

1948-ம் ஆண்டிலிருந்து சிங்கள ஏகாதிபத்திய' நடைமுறைகள் விசுவரூபம் பெறலாயின.

தமிழ்ப் பேசும் பெருமக்களை அடக்கி யொடுக்கிச் 'சர்வம் சிங்களமயம்' என்னும் நிலையினைத் தோற்றுவிக்க சிங்கள ஆட்சிப்பீடத்தலைவர்கள் நான்கு முக்கிய வழிகளைக் கையாளத் தொடங்கினர்.

தமிழ்ப்பிரதேசங்களில் திட்டமிட்டு சிங்களரைப் பெரும்பான்மையினராகக் குடியேற்றுதல்,

மலைநாட்டுத் தமிழ்த்தொழிலாளர்கள் பத்து இலட்சம் பேரது அரசியல் வாக்குரிமையைப் பறித்தல்.

தமிழ்மொழிக்குள்ள சமநிலையுரிமையை அழித்தல்.

அரசியல், சமுதாய, பொருளாதார ரீதியாக தமிழர் வலுவைக் குறைத்தல்.

இந்நான்கு வழிகளிலும் முப்பது இலட்சம் தமிழ்ப்பேசும் மக்கள் அடியோடு பாதிக்கப்பட்டனர். இலங்கையின் மொத்த சனத்தொகையில் மூன்றிலொரு பகுதியான தமிழ்ப் பேசும் சமுதாயத்தைக் கடந்த பதின்மூன்று ஆண்டுகளிலும் அவர்கள் தோற்கடித்து மகத்தான வெற்றி பெற்றுவிட்டனர்.

தமிழ்ப் பேசும் பெருமக்கள் இன்று, தமது தாயகம் பெரும் பரப்புக்களையும், பத்துஇலட்சம் பேரது அரசியல் வாக்குரிமை வாழ்வுரிமைகளையும், தமிழ் மொழிக்குரிய உயர்நிலையுரிமையையும் முற்றாக இழந்துவிட்டனர்.

இந்நிலையினை மாற்றியமைத்து, தமிழ்ப் பேசும் சமுதாயம் ஈழமணித் திருநாட்டில், தனக்குள்ள உரிய உயர்நிலையினையடைய வேண்டுமென்பதற்காகத்தான் இன்று ஈழத் தமிழகப் பிரதேசங்களெங்கும் அறப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து !

மலைநாட்டுத் தமிழ்ச்சோதரரின் அரசியல் உரிமைகளை உடனே வழங்கு !

தமிழுக்கு, சிங்களத்தோடொத்த உயர்நிலை கொடு !

தமிழ்ப்பேசும் பெருமினம் சுயநிர்ணயவாழ்வுபெற கூட்டாட்சி முறை அமை !

என்பனதான் இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையின்கீழ் நடைபெற்று வரும் அறப்போர் குறிக்கும் அருங்கருத்தாகும்.

இத்தகைய மாபெரும் சுதந்திரப் போராட்டத்தை தோற்றுவிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி கடந்த பன்னிரண்டாண்டுகளாகச் சலியாது பாடுபட்டு வந்திருக்கிறது.

தமிழினத்திற்கு இன்னல் தரும் சட்டங்கள் இயற்றப்படும் போதெல்லாம் பாராளும் மன்றத்திற்கு உள்ளும், புறமும், தமிழரசுக் கட்சி தீவிர போராட்டம் நடத்தியிருக்கிறது.

விடுதலை வேள்வித் தீயில் இன்னுயிர்ப் பலி பல தந்திருக்கிறது.

1948-ம் ஆண்டிலே தமிழரசு இயக்கத் தலைவர்களனைவரும் மூன்று மாதம்வரை வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு வாடி வதங்கினர்.

அந்த ஆண்டு மே, ஜூன் திங்கள்களில் நிகழ்ந்த இனக் கலவரத்தால் உயிரிழந்த தமிழர்கள் பன்னூற்றுக் கணக்கானோர், ஆவர்.

இலங்கையின் ஆட்சிப் பீடத் தலைவர்களாக அமர்பவர்களுக்குத் தமிழ்ப் பேசுமினத்திற்குரிய பங்கினை அளிக்க வேண்டும் எனும் நீதியுள்ளம் என்றுமே இருந்ததில்லை !

1957-ம் ஆண்டு ஆடித் திங்களில் அப்போதைய முதலமைச்சராகவிருந்த சொலமன்வெஸ்ற்றிஜ்வே டயஸ் பண்டாரநாயகா, தமிழரசுத் தலைவர் திரு. சாமுவேல் ஜேம்ஸ் வேலுப் பிள்ளை, செல்வநாயகம் அவர்களுடன் தாம் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு ஓராண்டுக் கால அவகாசம் கிடைத்தபோதும் எவ்வித மரியாதையுமளிக்கவில்லை.

1958-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அந்த மகாகனம் பிரதமர் ஒப்பந்தத்தைச் சுக்குநூறாகக் கிழித்து வீசி சிங்கள வகுப்பு வாதிகளைத் தமிழர்கள் மீது 'தாக்குதல்' செய்யத் தூண்டும் வகையில் அனல் பறக்கப் பேசினார்.

அதன் விளைவு இனக் கலவரமாக மலர்ந்ததுமே, ஜூன் திங்கள்களில் அந்தப் பிரதமரே தான் 1956-ம் ஆண்டு 'தனிச் சிங்களச் சட்டத்தை' எதிர்த்துச் சாத்வீக சத்தியாக்கிரகத்தை

(11-ம் பக்கம் பார்க்க)

# தேர்தலா? சில்லறை வியாபாரமா?

அரசியல் கட்சிகளின் செல்வாக்கை மதிப்பிடத்தக்க கருவி தேர்தல் ஒன்றுதான்-

ஜனநாயக அரசியல் அறிஞர்கள் அனைவரும் அப்படித்தான் கூறுவர்.

ஆனால், இந்தியாவில்—சிறப்பாகத் தமிழகத்தில்—இந்தக் கருத்து பொருந்துவதாக இல்லை.

தமிழகத்தின் அரசியல்-கட்சி என்று சொல்வதற்கு தகுதியும் யோக்கியமும் உள்ளது தி. மு. க. ஒன்றுதான்.

ஆனால், அரசியல் தத்துவமே விபரீதமாகப் பரப்பப்பட்டிருக்கிற காரணத்தால், அயல்நாட்டின் ஏஜண்டுகளும்கூட தமிழகத்தின் அரசியல்வாதிகள் என்று வேடம் புனைகின்றனர்—நடிக்கின்றனர்.

நாட்டுமக்கள் அனைவருக்கும் ஏனைய ஜனநாயக நாடுகளில் இருப்பது போல் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால், தேர்தல் காலத்தில் அந்த வாக்குரிமைகளை எளிதாகப் பெற்றுக் கொள்ளலாம் என்கிற நம்பிக்கை, உறுதியாக இருப்பதனாலேயே இப்படித் துணிந்து வாக்குரிமை வழங்கப்பட்டதுபோல் நடைமுறைச் செயல்கள் இருந்து வருகின்றன.

வாக்குரிமை பெற்ற மக்களில் சுமார் 30 சதவீதம் பேர் பணத்துக்கு வாக்களிப்பதையே தேர்தல் என்று கருதும்படி பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு 30 சதவீதம் பேரை பக்குவப்படுத்தி இருக்கிற விதம் இருக்கிறதே, அது, வியக்கத்தக்கது—அரசியல்வாதிகள் அனைவரும் கண்டறிந்து சிந்திக்கத்தக்கது!

மதத்தலைவர்களும் சாதித்தலைவர்களும் ஆட்சிபீடத்திலிருப்போருக்கு ஆதரவாக இருப்பது அங்கு இங்கு எனாதபடி எங்கும் எப்போதும் தொடர்ந்து வரும் வழக்கம்.

அத்தகைய சாதிமதத்தலைவர்களுக்கு ஆட்சிமுறை பற்றியோ, நாட்டு நிலைபற்றியோ, கவலை இருப்பதுமில்லை.

அவர்கள் இந்த உலகத்தில் விரும்புவதெல்லாம், சாதியும், மதமும், தழைத்துக் கொழுத்திருக்க வேண்டும்—அவ்வளவுதான்!

இந்த விருப்பத்தை ஆட்சிபீடத்திலிருப்பவர்தான் நிறைவேற்ற முடியும் என்று சாதி மதத்தலைவர்கள் நம்புகிறார்கள்,

குடியாட்சி என்பது முடியாட்சி போல நிலையான ஒரே போக்கில் இராதென்பது தத்துவம். இந்தத் தத்துவம் பற்றிக்கூட சாதிமதப் பித்தர்கள் சிந்திப்பதில்லை-உணர்வதில்லை.

எனவே, அவர்களிடம் தேர்தல் காலத்தில் ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் போய் எதிர்க்கட்சிகளின் போக்குகளைத் தப்பும் தவறுமாகக் கூறித், தேர்தலையே அயல் நாட்டார் படை எடுப்புப் போல் கருதும்படி செய்து விடுகிறார்கள்!

"இப்போது ஆட்சியிலிருப்பவர்கள் எதிரிகளின் முற்றுகையில் வீழ்ந்துவிட்டால் தங்களுடைய உயிர்க் குயிரான மதமும் சாதியும் வீழ்ந்துவிடுமே" என்று கருதும்படி சாதிமதத் தலைவர்களை ஆட்சியிலிருப்போர் செய்துவிடுகிறார்கள்!

இதனால் சாதிமதத் தலைவர்கள் தேர்தல் காலத்தில் நாட்டு நலம் ஆட்சி நலம் முதலிய எந்த சிந்தனையுமின்றி, அதுவரை ஆட்சியிலிருந்தவர்களையே மேலும் ஆட்சியில் இருத்துவதற்கு வரிந்து கட்டிக் கொண்டு திரிகிறார்கள்.

சாதிமதத்தலைவர்களை மீறி சுயசிந்தனையுடன் செல்லக்கூடியவர்களை சாதிமதக் கட்டுப்பாடுகள் செய்து அடக்குகிறார்கள்! அற்பத்தனமான ஆசாபாசங்களை விரும்புவோர்க்கு ரொக்கப்பணமோ பணத்திற்குச் சமமான ஏதேனும் திருப்தியோ கொடுத்து பெருந்திரளான கூட்டத்தைக் கட்டுப்பாடு செய்து வாக்களிக்கச் செய்கிறார்கள்.

இந்த வகையில் ஓரளவு கணிசமான வாக்குகள் ஆட்சியிலிருப்போருக்குக் கிடைக்கின்றன.

இதுபோல் இன்னொருவகையும் இருக்கிறது. எப்படி? பட்டிதொட்டிகளிலும் சிற்றூர்களிலும் வாழ்பவர்கள் பெரும்பாலும், அங்குள்ள இரண்டொரு பெரிய தனக்காரர்கள்சொல்கிறபடி நடப்பவர்களாகத்தான் இருப்பார்கள்.

அந்த இரண்டொரு பெரியதனக்காரர்களை வசப்படுத்தினால் ஊரையே வசப்படுத்தியதுபோலத்தான்!

அத்தகைய பெரியதனக்காரர்களுக்கு நாட்டுநலத்தைவிட ஆட்சிநலத்தை விட தங்களுடைய சொந்த வாழ்வு—செல்வம்—செல்வாக்கு இவற்றில்தான் அக்கறை இருக்கும்.

அதே நேரத்தில் ஆட்சியில் இருப்போரின் ஆதரவு இருந்தால்தான் தங்களின் வாழ்வுக்கும் ஆடம்பரத்திற்கும் மகிமை இருக்குமென்று ஒருவிதசபலபுத்தி கொண்டிருக்கிறார்கள்.

இந்த சபலபுத்தியை, ஆட்சியில் இருப்பவர்கள் தேர்தல் காலத்தில் மிகச் சரியாகப் பயன் படுத்துகிறார்கள். பெரிய தனக்காரரின் விருப்பத்திற்கு அரசாங்கத்தை ஈடுகாட்டிவிட்டு தேர்தலில் ஊரையே கட்டுப்படுத்தி ஒருமித்து வாக்களிக்க ஏற்பாடு செய்கிறார்கள். பெரிய தனக்காரர் தனது ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி ஆட்சியில் இருப்பவரையே தேர்தலில் வெற்றிபெறச் செய்கிறார். இதற்குக் கைமாறாக சட்டவிரோதமான திருப்திகளையும் பெறுகிறார்.

1937-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை நடந்த ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் இடைத் தேர்தலிலும் இதே நடைமுறையைக் கையாண்டு காங்கிரசு வெற்றி பெற்று வருகிறது.

சில்லறைப்பணம் விரும்புவோருக்குச் சில்லறை. பஸ்ரூட் கேட்போருக்கு பஸ்ரூட், லைசென்ஸ் பெர்மிட் கேட்போருக்கு லைசென்சு பெர்மிட்; உத்தியோகம் கேட்போருக்கு உத்தியோகம்; இப்படி தேர்தல் தரகர்களைத் திருப்தி செய்ய அரசாங்கம் ஈடுவைக்கப் படுகிறது.

இப்படி நடந்து முடிந்த தேர்தலை வைத்துக் கொண்டு ஜனநாயக தத்துவப்படி அரசியல் செல்வாக்கு என்பது எப்படிப் பொருந்தும்?

ஜனநாயக தத்துவப்படி தேர்தல் இல்லை. பணநாயகம் மூடநாயகம் கைக்கூலி நாயகம் ஆகிய பல்வேறு நாயகங்கள் காங்கிரசு வெற்றிக்குத் துணை செய்கின்றன. அத்துடன்சாதிநாயகம் மதநாயகம்ஆகியவைஇணைந்திருக்கின்றன.

மிக வெளிப்படையாகவே சாதி வெறி ஊட்டி வருவதைப் பார்க்கிறோம்,

ஆதித்திராவிட மக்களை எடுத்துக் கொள்வோம். அவர்களை சமுதாயத்தில் மேம்படச் செய்து இரண்டறக் கலந்துவிடச் செய்ய வேண்டும் என்பதில் யாருக்கும் எதிர்ப்போ ஆட்சேபனையோ இல்லை.

அதனாலேயே அரசாங்கத்தின் சலுகைகளை தடையின்றிப் பெறமுடிகிறது ஆதித்திராவிட மக்களால்.

உண்மை இப்படி இருக்க—ஏதோ காங்கிரசு ஒன்றுதான் தாழ்த்தப்பட்டவரின் தாயகம்போலவும். இதர அரசியல் வாதிகளுடன் ஆதித்திராவிடர் நலனுக்காகப் போராடிப் போராடிக் காங்கிரசு காப்பாற்றுவதுபோலவும் கருதும்படி கனம் கக்கன் பேசிவருவது நாடறிந்த ஒன்று.

ஆதித்திராவிடர்களை முன்னுக்குவரச் செய்யவேண்டுமென்பது தேசிய இலட்சியம்—எதிர்ப்பில்லாமல் எல்லாரும் ஒப்புக்கொண்டது- அதற்குச் செலவாகும் செல்வம் அத்தனையும் அரசாங்கத்தினுடையது.

அப்படி இருக்கிற நடைமுறையை ஒரு கட்சியின் சாதனையாக—ஒரு மந்திரி-சொல்லிவருவதன் உட்கருத்து என்னவாக இருக்கமுடியும்? சாதி வெறியூட்டுகிறார் என்றுதானே கருதவேண்டும்?

கனம் கக்கனின் கண்மூடித்தனத்தை தத்துவரீதியாக விளக்கி யாரும் கண்டிக்க முன்வராதது மிக மிக வருந்தத்தக்கது.

இது ஒருபுறமிருக்க ஆட்சிபீடத்தில் என்றென்றும் காங்கிரசுக்காரர்கள் இருந்தால்தான் நாட்டுக்கு நல்லது என்று ஒருவகைபயமுறுத்தல் பிரசாரம் நடைபெறுகிறது. இது ஜனநாயகத்தை அவமதிப்பதும் மக்களை மிரட்டுவதுமாகும்.

இதுவரை காங்கிரசு தவிர எந்த அரசியல் கட்சியுமே நிர்வாகத்திற்கு வந்ததில்லை—வரமுடியவில்லை. சாதாரண கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பஞ்சாயத்துப் போர்டிலிருந்து பார்லிமெண்ட் வரை காங்கிரசு ஏகபோக ஆதிக்கம் செலுத்துகிறது. கடந்த 14 ஆண்டுகால ஆட்சியிலும் நாட்டின் பொருளாதார நிலை கலகலத்துச் சீர்குலைந்திருக்கிறது. இத்தகைய கடுமையான பொருளாதாரச் சீர்கேட்டையும் கடன் தொல்லைகளையும் சம்பாதித்துக் கொடுத்த பெருமை முழுக்க முழுக்க காங்கிரசையே சேரும்!

ஆனால். அந்த சீர்கேட்டை உணருமளவுக்கு நாட்டுமக்கள் அறிவு பெறவில்லை என்ற தைரியத்தால் 'வேறு யார் வந்தாலும் நாட்டைக் கெடுத்துவிடுவார்கள்" என்பது, முட்டாள்தனமும், போக்கிரித்தனமும், ஆணவமும், கலந்த ஒருவகைக் கலவைக்குணம் என்றே கூறவேண்டும்! நாட்டைக் கெடுத்தவர்கள்-கெடுத்துக்கொண்டிருப்பவர்கள், மற்றவர்களை இப்படித் துணிந்து கூறும் புதுமையை இங்கேதான் காணமுடியும்!

யாரையாவது ஆட்சிக்கு வரவிட்டதுண்டா? எவரையாவது ஆளத்தான் விடுவார்களா? எந்த அனுபவ ஆதாரத்தைக் கொண்டு "மற்றவர்கள் ஆட்சிக்கு வந்தால் கெடுத்துவிடுவார்கள்" என்று வாய்கூசாமல் பேசுகிறார்கள்?

அரசியல் நடைமுறை சம்பந்தமான குற்றச்சாட்டுகளை இதுவரை எந்த மந்திரியாவது கண்ணியமான பதில் கூறி விளக்கம் தந்து மறுத்ததுண்டா?

பெரியமனிதர்கள் பத்திரிகைகளில் எத்தனைவிதமான குற்றச்சாட்டுகளை விடுத்திருக்கின்றனர்? ஒன்றுக்காவது தெளிவான விளக்கம் உண்டா? இதுவா ஜனநாயகம்? ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக் கொள்வோம்.

தமிழரசுக் கழகம் தமிழ்நாடு பெயர் சூட்டக்கோரி அறப்போர் தொடங்கியது. பிரிட்டிஷ் அரசி வரும்வரை அந்த அறப்போரை அவமதித்துக் கொண்டிருந்தார்கள். பிறகு எப்படியோ அரைகுறையாக மாறுதல் செய்வோம் என்று இறங்கி வந்தார்கள்.

இப்போது மந்திரி பக்தவச்சலம் சொல்கிறார்: "ஏற்கனவே, தமிழ்நாடு பெயர் சூட்டப்பட்டது என்று. மா. பொ. சி. அதைமறுக்கிறார்.

இதில் யார் பொய்யர்? தெளிவுபடுத்த வேண்டாமா?

தமிழ்நாட்டின் அரசாங்கம் என்ன? 8 மந்திரிகளின் பூர்வார்ஜிதமா? ஒரு இயக்கத்தின் சார்பில் ஒரு மந்திரியின் சொல்லை மறுத்த பிறகும், வாயை மூடிக் கொண்டு மமதையோடிருப்பதுதான் ஜனநாயகமா?

இவைபோன்ற ஜனநாயகத்திற்கு மாறுபட்ட செயல்கள் எத்தனையோ இருக்கின்றன. நாட்டிலுள்ளவர்களுக்கும் சாக்கடை நாற்றம்போல ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகி விட்டது இந்தப் போக்கு.

இவைகளை எல்லாம் தத்துவப்படுத்தி ஆராய்ந்தால் இதர நாடுகளின் ஜனநாயகப் பண்புகளோடு ஒப்புநோக்க முடியாதபடி இங்குள்ள நிலைமை இருப்பதை உணரலாம்.

இங்கு எற்படும் தேர்தல் முடிவுகளும் கட்சியின் செல்வாக்குகளைக் கணிப்பதற்குப் பயன்படாது. இது ஒரு வியாபாரம்!

"மாசரா"

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 7 | 8-4-'61 | இதழ் 42

## பாவம் தமிழர்கள்!

எங்கள் சமுதாயத்தின் உயிர், மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

அதன் அங்கங்கள், பெருநெருப்பில் வெந்துகொண்டிருக்கின்றன.

எங்கள் சமுதாயத்தின் ஒவ்வொரு குடிமகனும், ஒவ்வொரு பகுதியில் நின்று ஓலமிடுகிறான்.

பர்மிய வயல்களில் பசுமை படரச் செய்தவன் அவன்தான்.

மலைநாட்டைக் கலை நாடாக்கியவனும் அவனேதான்.

மறக்கடிக்கப்பட்ட இந்த உண்மைகளை, இப்போதெல்லாம் வெறும் வார்த்தையளவில்தான் அவன் சொல்லிக்கொள்ள முடிகிறது.

மனிதர் நுழையப் பயந்த காடுகளிலெல்லாம் மனந் துணிந்து நுழைந்தவன் அவன் தானென்பதும்—

இந்த மலையில் ஏறமுடியுமா என்று உலகம் திகைத்த காலை, மலைச்சாலைகளை அமைத்துத் தந்தவன் அவன்தானென்பதும்—

கடல் மூழ்கி முத்தெடுத்தவன் அவன் தானென்பதும்—

நிலம் பிளந்து பொன்னெடுத்தவன் அவன் தானென்பதும்—

வெறும் மேடை முழக்கங்களாகவே போய்விட்ட நிலையில், அவனது துயரங்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன.

சகோதரர்களின் ரத்த பாசமே தடம் பெயர்ந்து போய் விட்டது.

'மாந்தளை'ச் சிறைச்சாலையில் வழியறியாது மயங்கிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான சகோதரர்கள்—

தங்கள் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ் நகரத்தின் தெருக்கள், எங்கள் சகோதரர்களின் ரத்தத்தாலே அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

பிஜித்தீவின் தோட்டங்களிலே எங்கள் பரிதாபத்துக்குரிய சகோதரர்கள், தங்களைப் பலி கொடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

கடல் கடக்க வழிகாட்டியவனும், கப்பல் செய்து தந்தவனுமான எங்கள் முன்னோன்—

சாவதற்கே எங்கள் சமுதாயத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறான்.

அந்தப் புழுப்பூச்சிகள், அடிபட்டாலும் துடிப்பதற்குக்கூட உரிமையில்லாது அடங்கிக் கிடக்கின்றன.

காலா காலங்களுக்குக் கண்ணீர் வடிக்கும் உரிமை மட்டும் எல்லா நாடுகளிலும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

துயரத்தை யாருக்குச் சொல்வதென்று தெரியாமல், தனக்குத் தானே சொல்லிக்கொள்வதற்குப் பெயர்தான் கண்ணீர்.

அவர்கள் பாவம்! வேறு யாரிடம் சொல்வார்கள்?

நொண்டி நுடமாக, கூன்குருடு செவிடாக, தாய்த் தமிழகத்தை ஆட்சி செய்யும் தங்கள் சகோதரர்களை நோக்கி அவர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

ஆட்சி மன்றேறிய உயிர்வர்க்கங்களோவெனில், அவர்களது வேதனைக் குரலைக் கீதங்களாக ரசித்துக்கொண்டிருக்கின்றன.

பாவம் தமிழர்கள்!

இப்படியோர் இனம் உலகத்தில் ஏன்தான் தோன்றியதோ?

சராசரி மனிதர்களுக்குக் கிடைக்கும் சராசரி உரிமைகள்கூட அவர்களுக்கில்லை!

அவர்கள் பார்க்கிறார்கள்; மற்றவர்கள் வாழ்ந்துகொண்டிருப்பதை.

அவர்கள் மூச்சுவிடுகிறார்கள், உயிர் வாழவேண்டுமேயென்று.

அவர்கள் இருதயம் பரந்துகிடப்பதாக எல்லோருமே சொல்கிறார்கள்.

பரந்துகிடக்கின்ற அந்த இருதயம் முழுவதிலும், துயரம் நிறைந்து கிடப்பதைக் காண மறுக்கிறார்கள்.

பிறருடைய கருணைக்காகவே அவர்கள் ஒவ்வொரு நாளும் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குக் கைகொடுத்து மீட்கக்கூடிய சக்தி உலகில் எங்கேனும் இருக்கிறதா?

ஆட்சியிலிருந்து யாரும் அதை எதிர்பார்க்கவில்லை.

அவர்களுக்காகத் தீவிரமாகப் போராடக்கூடிய ஆசை, இன்னும் யாருக்கும் எழவில்லை.

வெறும் கற்பனை மயக்கத்திலும், கனவுலகத்திலும்தான் அவர்கள் அமைதி கொள்ளமுடியும்.

ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு கூட்டம் செத்து மடிவதைத் தவிர வேறு வழியில்லை.

வெறும் வார்த்தைகளாலே எந்த நாட்டின் சட்டமும் மாறிவிடுவதில்லை.

ஏமாளியாக, இளித்தவாயனாகச் சாகவேண்டுமென்பதே தமிழனின் தலையெழுத்து.

இன்னும் மோசமான செய்திகளை, வெளி நாடுகளிலிருந்து நாம் எதிர்பார்க்க வேண்டும்.

முடியுமானால், அந்தச் செய்திகள் வரும்போதெல்லாம் கொஞ்சம் கண்ணீர் வடிப்போம்.

உடலும் உள்ளமும் மரத்துப்போன உயிர் வர்க்கங்களை ஆட்சியில் உட்கார வைத்துவிட்டு, அநியாயத்தை வேடிக்கை பார்ப்பதைவிட வேறு விதி நமக்கென்ன இருக்கிறது?

தமிழுலகம், தன் அழிவை நோக்கி விரைகிறது.

இன்னும் குறுகிய காலத்திற்குள்ளாகவே பேரழிவிற்கு அது ஆளாகப் போகிறது.

நமது சகோதரர்களின் பிணங்கள், வேறு வேறு பூமிகளில் புதைக்கப்படப் போகின்றன.

ஜனத்தொகை குறைய வேண்டுமென்று விரும்புகிறவர்கள், உண்மையிலேயே மகிழ்ச்சியடையலாம்.

கூட்டங் கூட்டமாக எங்கள் சகோதரர்கள் மடியப் போகிறார்கள்.

அப்போதெல்லாம் சிலர் அழுவார்கள், சிலர் சிரிப்பார்கள்.

நாம்மட்டும் சிரித்துக்கொண்டே அழுவோம்.

அழுதுகொண்டே சிரிப்போம்.

அதைச் செய்ய நமக்கே தனியாக உரிமை இருக்கிறது; யாரிடமும் கேட்க வேண்டியதில்லை.

கண்ணதாசன்


மே முதல் வார இதழிலிருந்து....

**தோமான்**

**கண்ணதாசன்**

**படைக்கும் கற்பனை உலகம்**

[ஏப்ரல் 15உ தென்றல், மலராக வருவதால் நண்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, மே முதல் வாரத்தில் துவங்குகிறது]

**புதுவகை இலக்கியம்!**
**தமிழில் முதல் முயற்சி!**

★ தோழர்கள், தங்கள் இதழுக்கு, தங்கள் பகுதி விற்பனையாளரிடம் பதிவு செய்க!

★ விற்பனையாளர்கள் கூடுதல் இதழ்களுக்கு முன் பணத்தோடு எழுதவும்.

★ இடையில் துவளாமல், ஓரிதழிலும் விடுபடாமல் வெளிவரும்.

★ துவக்க இதழ்களைத் தவற விடுவோர், பின் அவற்றைப் பெறுவது கடினம்.

★ சந்தாதாராகிவிடுவதும், இதழ் தொடர்ந்து கிடைக்கச் சரியான வழியாகும்.

ஆண்டுச் சந்தா ரூ. 7-50. ஆறு மாதம் ரூ. 3-75.

**தென்றல்**
சென்னை-6

# பச்சையப்பன் கல்லூரிக் கவியரங்கம்

தலைவர் : கண்ணதாசன்

## புன்முறுவல்



தஞ்சை கோவிந்தராமானுசம்

தொட்டிகட்டில் சுடுகாட்டுத் தத்து வத்தைப்
பட்டியிலும் பலர்அறிய மேடை மேலும்
பக்குவமாய்ப் பேசிபெறும் பேறு பெற்றார்!
பார்க்குள்ளே பெரியார்போல் அஞ்சா எண்ணம்
பலகொண்டார்! பகுத்தறிவுக் கவிஞர் வாழ்க!
பண்பமைந்த அவையோரே நீவிர் வாழ்க!
பச்சையப்பன் கல்லூரிக் கவிஞர் வாழ்க!

புண்ணான சாதிமதப் பூசல் யாவும்
புரையோடிப் புலைநாற்றம் வீசும் நாட்டில்
புன்முறுவல் பூக்கின்ற மனிதர் உண்டா?
போகிறது தலைப்பிற்காய் முறுவல் செய்வோம்!

**புராணம்**

பெண்உமையை இடப்பாகம் ஏற்றிக் கொண்ட
பித்தசிவன் எரியூட்ட முறுவல் செய்தான்!

**வரலாறு**

கண்ணான கொள்கைக்காய் நஞ்சை ஏந்தி
கனத்தஉடல் 'கிரீஸ்பெரியார்' முறுவல் செய்தார்!

**பழைய மாணவர்**

எண்ணாத எதிர்ப்புணர்ச்சி மீறும் போது
'ஈ. வி. கே. சம்பத்'தும் முறுவல் செய்தார்!

**எலிசபெத்**

என்கையை உயர்த்திநான் ஆட்டும் போது
'எலிசபெத்து' எனைப்பார்த்து முறுவல் செய்தாள்!
ஏமாந்தான் என்நண்பன் எட்டிப் பார்க்க
என்உயரம் இல்லாதோன்! முறுவல் செய்தேன்!
என்னென்பேன் 'எடின்பரோ' என்னைப் பார்த்து
எட்டிஎட்டிக் கையாட்டி முறுவல் செய்தார்!

**கல்லூரி முதல்வர்**

பொன்னான உணர்ச்சியினால் கிளர்ச்சி செய்து
புறம்போகிக் கதவடைக்கும் போது எங்கள்
விண்ஆளும் ஒலிஎழுப்பி ஆர வாரம்
வீரிட்டுக் கத்திடுவார் முறுவல் செய்வார்!

**பேராசிரியர் மு. வ.**

அருந்தமிழின் உயர்வெண்ணி எண்ணி எண்ணி
அலமந்த நெஞ்சுடையார் ஆகவே தான்
அருமைக்கு அருமைபுன் முறுவல் காணல்!

**லுமும்பா**

கட்டைவிரலை 'மொபுடு' கடிக்கச் சொன்னான்
'கசவுபு'வோ 'லுமும்பா'வை கசாப்பே செய்தான்!
காங்கோவின் தனித்தலைவன் கருப்பன் அந்தக்
காலத்தில் புன்முறுவல் செய்தான்! அந்தோ!

**எழுத்தாளன்**

ஏடெழுதும் எழுத்தாளன் கதையை ஆங்கோர்
ஏமாளிவாங் கையிலே உதட்டை மாற்றி
ஏழுவிதமாய்க் கோணி முறுவல் செய்வான்!

**அரசியல்வாதி**

மேடையிலே ஒலிபெருக்கிப் பார்த்து விட்டால்
மிகப்பெரிதாய் சுவரொட்டிப் பெயரைக் கண்டால்
பாடையிலே எதிர்க்கட்சி கொள்கை சென்றால்
ஜாடையிலே அரசியலான் முறுவல் செய்வான்!

**வண்ணான்**

துணிகிழிந்து பொத்தான்கள் அழித்து போச்சு
துணியில்லை இதைச்சொல்ல உதடு மட்டும்
தொனிப்பொருளாய் புன்முறுவல் முன்னே சிந்தும்!

**சினிமாஸ்டார்**

திரைப்படத்தில் மின்னலிடும் நடிகை முன்வாய்
உதட்டோரச் சாயத்தில் வளையும் நேரம்
உணர்வாலே எரிகின்ற காமந் தன்னால்
உருக்குலைந்து நிலைமாறி வறுவல் ஆகும்
உள்ளங்கள் ஒருகோடி! முறுவல் ஒன்று!

**முறுகல்**

'அண்ணபூ ரணா'கடைக்குச் சென்று ஆங்கோர்
ஆரணங்கை முறுகல்தோ சைதான் கேட்டேன்!
கருகிப் போய் தோசைக் கல்லான ஒன்றைக்
கட்டாயப் படுத்தி என்தட்டில் போட்டாள்!
'என்னஇது?' என்றிட்டேன்! முறுவல் பூத்தாள்!
முறுகலுக்கு முறுவலினைப் பரிசாய்த் தந்தாள்!

**நாம்**

காலையிலே கல்லூரி ஊர்தி ஏறிக்
கடக்கின்ற போதங்கே பெண் கல்லூரிக்
கண்டிட்டால் காளைமனம் போதை கொண்டு
கருத்தாகப் புன்சிரிப்பை உதட்டில் ஏற்றும்!
காட்சிக்கு அழகில்லையேல் நிலையே மாறும்!
வகுப்பறையில் தாமதித்து நுழையும் போது
வாடிக்கை யாய்முறுவல் முன்னே வைப்போம்!
பொறுப்பான தேர்வு நெருங்குங் காலத்தில்
பொல்லாத ஆசிரியர் நகைப்பார்: என்னே?
நமக்கிடுக்கண் இவர்நகைக்க நியாயம்இல்லை!
நல்லதுவோ? கெட்டதுவோ? முறுவல் செய்வோம்!!
தப்பிக்க வழிவகுக்கும் முறுவல் வாழ்க?

**நான்**

நான் படித்து உருப்போட்ட இலக்கணத்தில்
நல்லதொரு வினாதேர்வு நாளில் வந்தால்
தேன்குடித்த முடவனென முறுவல் செய்வேன்!
திகட்டாதத் தெள்ளமுதத் தமிழே வாழ்க!

**ஒரே உரிமை**

மண்ணுலக உயிரினத்தில் மனிதன் மட்டும்
மதிப்புமிகு புன்முறுவல் உரிமை கொண்டான்!
சிந்தையிலே உவகைபெற்ற மெய்ப்பாடெல்லாம்
சிரிப்புநகை முறுவல்எனக் குறிப் பிட்டார்கள்!
விந்தைஇலை! சிரிப்பதுதான் பொது எல்லார்க்கும்!
திரைஉலக வில்லனுக்கே நகைப்பு வேண்டும்!
இடம்பொருள் ஏவல்களினால் இயல்பை மாற்றும்
ஏற்றமிகு புன்முறுவல் விகுதி யாகும்!
ஏமாந்த நாமெல்லாம் பகுதி யாவோம்!

**முடிப்பு**

கவிஞருக்கு இவ்வரங்கில் இருக்கை இல்லை
கண்டிட்ட காந்திமகான் முறுவல் பூத்தார்!
கண்முன்னால் இருக்கின்றார் காண்க!—நன்றி!

# கில்லாடி முத்தன் எம்.எல்.ஏ.

"அருப்பை கிழார்"

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தான் இவ்வளவு முடனுக இருப்பதை பக்கத்தில் அமர்ந்திருக்கும் திலோத்தமா தெரிந்தால் எவ்வளவு கேவலமாக நினைப்பாள் என்று ஒரு கணம் நினைத்தான். அது, அவனுக்குப் பெரிதும் அவமானமாகத் தோன்றியது.

புதுக்கோட்டை புண்ணியமூர்த்தி ஐயரிடம் போய் என்ன கூறுவது. எப்படி பேச ஆரம்பிப்பது என்று சிறிது நேரம் சிந்தித்தான். ஒன்றுமே புரியவில்லை. திலோத்தமா இருப்பதால் அவள் எப்படியாவது சமாளித்து விடமாட்டாளா என்று நினைத்தான். அந்த எண்ணம் அவனுக்கே அசட்டுத்தனமாகத் தோன்றியது.

"இவ்வளவு அழகும் அறிவும் சாதுரியப் பேச்சும் படைத்த திலோத்தமா தனக்கு மனைவியாய் இருந்தால் எவ்வளவோ உதவியாய் இருக்குமே" என்று ஒரு கணம் நினைத்தான். மறுகணமே அவளுடைய கணவனுக இருக்க தனக்கு எவ்வித தகுதியும் கிடையாது என்று அவனுடைய உள்மனம் தடைபோட்டது. திடீரென்று திலோத்தமா என்ன செய்து கொண்டிருப்பாள். என்று அவளிருந்த பக்கம் திரும்பினுன்.

அவளும் அவனும் காரின் பின்புறமுள்ள ஆசனத்தில் கதவோரமாக அமர்ந்திருந்தனர். ஆதலால் சிரமமின்றி ஒருவரை யொருவர் பார்க்கமுடியும். கில்லாடி திரும்பியபோது அவள் வெளியே மாறி மாறித் தென்படும் மரங்களையும் காடுகளையும் பார்த்துக் கொண்டிருந்தாள். அது மழைக்காலம் ஆதலால் எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேர் என்று புல் பூண்டு செடி கொடிகள் முளைத்திருந்ததுடன் ஆங்காங்கு வயல்களிலும் காடுகளிலும் நெற்பயிர்களும் கம்பு சோளம் முதலிய பயிர்களும் முளைத்து கண்ணுக்கு விருந்தாக இருந்து பிரயாணம் இன்பமாக இருக்கவும் உதவி செய்தன. திலோத்தமா சூடியிருந்த மலர் மணமும், பூசியிருந்த முகப் பொடியின் நறுமணமும், சேலையில் தெளித்திருந்த செண்டின் வாசனையும், காருக்குள் சிதறிப் போக வழியில்லாததால், காருக்குள் அத்துமீறி ஒருபுறம் நுழைந்து, மறுபுறம் வெளியே காற்றுடன் கலந்து கில்லாடியின் முகத்தோடு உராய்ந்து கொண்டு வெளியேறும் போது, அவனுள்ளத்தில் இன்பப் போதையை ஏற்றிவிட்டுச் சென்றவண்ணம் இருந்தன.

உலகநடப்புத் தெரியாத கில்லாடி தன்னைப்பற்றிய ஒரு தாழ்வு மனப்பான்மையும் திலோத்தமாவைப் பற்றிச் சிறந்த எண்ணமும் மாறிமாறி உள்ளத்தில் தோன்ற தன்னை மறந்த நிலையில் ஆசனத்தில் சாய்ந்து கிடந்தான்.

கார் புதுக்கோட்டையை நெருங்கும் போது இதமாக வீசிக் கொண்டிருந்த காற்று பலமாக வீசத்தொடங்கியது. அந்தக் காற்றில் ஈரவாடையும் கலந்திருந்ததால் இதுவரை ஒன்றும் பேசாமல் வெளியே பார்த்துக் கொண்டிருந்த திலோத்தமா "ஏங்கோ மழை பெய்கிறது" என்ருள்.

வண்டியை 45-50 கல் வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்த வலவன் (Driver) "மதுரைப்பக்கம் மழை பெய்வதுபோல் தோன்றுகிறது" என்ருன்.

"இந்தப்பக்கம் மழையின் அடையாளமே இல்லையே" என்று மதுரைக்கு எதிர்த்திசையைக் காட்டினுன் முத்துசாமி. புதுக்கோட்டையிலுள்ள கீழராச வீதியிலிருந்த வீட்டின் முன்னுல் போய் நின்றவுடன் 'சடசட'வென்று பலமான மழையும் பிடித்தது.

திலோத்தமா மெதுவாக காரை விட்டிறங்கி வீட்டிற்குள் போனுள். வாசலில் நின்று கொண்டிருந்த 40 வயதுடைய அம்மாள் ஒருத்தி "வாருங்கோ !" என்று வரவேற்ருள். தொடர்ந்து "யாரைத் தேடிவந்தேள் ? நீங்கள் யார் ?" என்ருள்.

"உடும்புக்குடித் தலைவர் கில்லாடி முத்துசாமி, நமது புண்ணியமூர்த்தி சாமியைப் பார்த்துப் போக வந்திருக்கிருர்" என்ருள் திலோத்தமா.

"அப்படியா ! இப்போது சாமி ஊரில் இல்லையே ! திருச்சிக்குப் போயிருக்காளே !' என்ருள் அந்த அம்மாள்.

"சாமி, எப்போது திரும்புவார்கள் ?"

"நாளைக்கு வந்துடுவா ! ஆமாம், ஏன் கில்லாடி காரிலேயேஇருந்துட்டார்? வரலாமே அழைத்துவரக்கூடாதோ ?'

"மழையாய் இருக்கிறது. உங்களுக்கு ஏன் தொந்தரவு கொடுக்க வேண்டும், சாமி இருந்தால் வருவோம் ; இல்லாவிட்டால் திரும்பி விடலாம், என்று காரிலேயே இருந்து விட்டார்" என்ருள் திலோத்தமா சாமர்த்தியமாக.

"நீங்கள் கில்லாடிக்கு...?" என்று இழுத்தாள் அந்த அம்மா.

(புன்முறுவலுடன்) "தெரியவில்லையா?' என்று, பலபொருள் தரும் கேள்வியைக் கேட்டுவிட்டு நாணப்படுகிறவள் போல் நடித்தாள் திலோத்தமா.

இந்த நடிப்பின் குறிப்பைக் கண்டதும், அந்த அம்மாள் கில்லாடியின் மனைவிதான் திலோத்தமா என்றும், இப்படிப்பட்ட படித்த நாகரிகப் பெண்ணின் கணவன் சாதாரணமாக இருக்க முடியாதென்றும் கருதிக் கொண்டாள்.

அப்போது திலோத்தமாகேட்டாள்;

"நீங்கள்......சாமிக்கு...?'

'ஆத்துக்காரிதான்...?" என்ருள் அந்த அம்மாள்.

"நல்லது ! நாங்கள் தேடிவந்ததாக சாமியிடம் கட்டாயம் சொல்ல வேண்டும் !" என்ருள் திலோத்தமா.

"ஆகா சொல்கிறேன், புறப்பட்டு விட்டீர்களோ ? கொஞ்சம் காபி சாப்பிட்டுப் போகலாமே வாருங்கோ !" என்ருள் அந்த அம்மாள்.

"தாங்க்ஸ்' நாங்கள் இப்போது தான் சாப்பிட்டோம். அதோடு, சாமி இல்லையானுல் உடனே திரும்ப வேண்டும், என்று சொன்னுர் அவர். நாங்கள் முக்கிய வேலையாக மதுரைக்குப் போக வேண்டும்" என்ருள் திலோத்தமா.

"சரி' அவசரமாயிருந்தால் போகத்தானே வேண்டும். நான், சாமி வந்ததும் சொல்கிறேன்" என்ருள் அந்த அம்மாள்.

அந்த அம்மாளிடம் வணக்கம் சொல்லிவிட்டு காரில் வந்து ஏறினுள் திலோத்தமா. கில்லாடிக்கு எந்த ஊருக்கு வந்தோம் யார்வீட்டின் முன்னுல் நிற்கிருேம். உள்ளே திலோத்தமாவுடன் பேசிக்கொண்டிருந்த அம்மாள் யார். என்கிற விவரங்கள் எதுவுமே தெரியாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு, வண்டியில் உட்கார்ந்திருந்தான்.

திலோத்தமா வண்டியில் ஏறியதும், ஊர்க்கடைசியில் உள்ள பெரிய ஓட்டலுக்கு விடச் சொன்னுள் வலவனிடம். முத்துசாமி இருந்த பக்கம் திரும்பி "புண்ணிய மூர்த்திஐயர் திருச்சி போயிருக்கிருராம். நாளைக்குத்தான் திரும்பி வருவாராம். நாம் நேராக மதுரைக்குப் போய் நமது வீட்டில் தங்கி இருந்துவிட்டு, நாளைக்குத் திரும்பவும் இங்கே வரலாம் என்று கருதுகிறேன். நீங்களும் மறுக்காமல் என்னுடன் என் வீட்டுக்கு வரவேண்டும். இன்றைக்கு ஒருநாள் என்னுடைய விருந்தாளியாக இருக்கவேண்டும்" அன்பொழுகக் கூறினுள்.

"எனக்கு...ஆட்சேபனை இல்ல... நீங்க ரொம்ப சிரமப்படறிங்களே'ன்னு தான் வருத்தமா இருக்கு" என்ருன் கில்லாடி.

இதற்குள் கார் ஓட்டல் வாசலில் போய் நின்றது. வலவன் உட்பட மூவரும் ஓட்டலில் சாப்பிட்டனர். சாப்பிட்ட பில்லுக்கு திலோத்தமாதான் பணம் கொடுத்தாள். பிறகு, காரில் ஏறிக் கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டனர்,

வழியெல்லாம் மழை பெய்து நீரும் சேறுமாகக் காட்சியளித்தது. ஒரு வாரமாகத் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால், ஆங்காங்கு சிற்ருேடைகளிலும், குளம் குட்டைகளிலும், நீர் தேங்கி நின்றன.

மேலூருக்கும் மதுரைக்கும் இடையில் கார்வந்து கொண்டிருக்கும்போது எதிரில் தீயணைக்கும் லாரி ஒன்று 'கணகண' என்ற பேரொலியுடன் மதுரையிலிருந்து மிக வேகமாக வந்து கொண்டிருந்தது,

"இந்தமழையில்கூடவா தீப்பிடித்து விட்டது ?" என்று வியப்புடன் கேட்டாள் திலோத்தமா.

அவள் வாய்மூடுவதற்குள் தீயணைக்கும் வண்டி அவர்களுடைய காரை நெருங்கிவிட்டது. அந்த வண்டிக்கு வழிவிடுவதற்காக இடதுபுறம் சற்றே காரை ஒதுக்கினுன் வலவன்.

அவ்வளவுதான் மழையினுல் பொருமிக் கிடந்த இடத்தில், காரின் முன் சக்கரம் இரண்டும் அரையடி ஆழத்திற்கு மேல் புதைந்து, சுக்கானைத் (Steering) திருப்பவே முடியவில்லை-இனிமேல் வண்டியைத் திருப்ப முடியாது என்று கருதிய வலவன், தடுப்பை (பிரேக்)ப்போடுவதற்குள், நெடுஞ்சாலையின் ஓரமாக நின்ற மைல் கல்லில் மோதி, அந்த மைல்கல், முற்றிலும் கீழே படுக்காமல் அரை குறையாய்ச் சாய்ந்த நிலையில் நிற்கவே, அதன் மேல் முன் சக்கரம் ஒன்று மிதித்தேறி, கார் குடைசாய்ந்து நெடுஞ்சாலையின் மேல் வந்து வீழ்ந்தது.

"ஐயோ அம்மா' என்று கில்லாடியும் திலோத்தமாவும் அலறிய அலறல் மேற்கே மதுரைக்கும் கிழக்கே மேலூருக்கும் கேட்டிருக்கும்.

திலோத்தமாவுக்கும் கார் வலவனுக்கும் (Driver) காயம் அதிகமில்லை. எனவே இருவரும் தட்டுத் தடுமாறி காரிலிருந்து ஜன்னல் வழியாக வெளியேறினுர்கள்.

கில்லாடி பின்புற ஆசனத்திலிருந்து தூக்கி எறியப்பட்டு எதிரிலிருந்த ஜன்னலில் மோதி தலையில் அடிபட்டதால் உள்ளேயே கிடந்தான்.

கில்லாடி கிடந்த நிலை, அவன் செத்துப்போயிருப்பானே என்று கருதும்படி இருந்ததால் திலோத்தமாவின் மனக்கோட்டைகள் தவிடு பொடியாகி விட்டது. திடீரென்று தோன்றிய அதிர்ச்சியால் பைத்தியம் பிடித்தவள் போல் முன்னும் பின்னுமாக "ஐயோ ! அம்மா !" என்று கூச்சலிட்டுக் கொண்டே ஓடினுள்.

அது, மழை பெய்து விட்டிருந்த நேரமாதலால் நெடுஞ்சாலையில் மனிதர் நடமாட்டமே இல்லாதிருந்தது. நெடுஞ்சாலையின் ஓரமாக இருந்த நெல் வயல்கள் தென்னந்தோப்புகள் ஆகியவற்றில் விவசாயி

(8-ம் பக்கம் பார்க்க)

# தலையாலங்கானத்துப் போர்

"புலிப்பாணி"

—சென்ற இதழ்த் தொடர்ச்சி—

**காட்சி 3.**

காலம் : விடிந்து 28 நாளிகை.

இடம் : தலையாலங்கானம்—பாசறை.

இருப்போர் : சேரசோழ வேந்தர்களும் ஐம்பெருவேளிரும் அவர்தம் படைத்தலைவரும் அமைச்சர்களும்.

சோழன் : திருமுகம் கொண்டுபோன தூதன், இன்னும் திரும்பவில்லையே?

வாயில் காப்போன் : இதோ வருகிறார் அரசே!

[தூதன் சோழனை வணங்குகிறான்]

சோழன் : என்ன சிங்கமார்பரே! நமது திருமுகத்தைச் சேர்ப்பித்து விட்டீரா?

சிங்க : ஆமாம் அரசே!

சோழன் : நீர் போகும்போது அந்தச் சிறுவன் இருந்தானா?

சிங்க : ஆமாம் அரசே!

சோழன் : ஏதாவது சொன்னானா?

சிங்க : ஒன்றும் கூறவில்லை வேந்தே!

சோழன் : உம்மிடம் திருமுகத்தை வாங்கியவர் யார்? அந்தச் சிறுவனா?

சிங்க : இல்லை அரசே! அவர் அரியணையில் கம்பீரமாக அமர்ந்தவர், அசையவே இல்லை அரசே!



சோழன் : கொலுவுக்கேற்ற பொம்மை! சரி! உம்மிடம் திருமுகம் பெற்றவர் யார்?

சிங்க : அமைச்சர் கோக்கோதையார் அரசே!

சோழன் : அவர் என்ன சொன்னார்?

சிங்க : வேந்தே! திருமுகத்தைப் பெற்றுக்கொண்டவுடன் 'நீ போகலாம்' என்றார். வேறு ஒன்றும் கூறவில்லை!

வாயில்காப்போன் : அரசே! மதுரையிலிருந்து தூதர் ஒருவர் வந்திருக்கிறார்.

சோழன் : வரச்சொல்!

[மதுரைத் தூதன் சோழனுக்கு வணக்கம் செலுத்துகிறான்]

சோழன் : யார் நீ?

தூதன் : "காந்தளூரைக் கைக்கொண்டு, வேந்தர் வேந்தர் தலை வணங்க, வடவாரியப் படைகடந்து, இமயத்தலையில் சுறுமீன் பொறித்து, ஈழங்கொண்ட தென்னர் கோமான், மன்னர் மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் விடுத்த திருமுகம் ஏந்திய தூதன்" (என்று சொல்லிக்கொண்டே திருமுகத்தை நீட்டுகிறான். பெருங்கோ வேளிர் என்பவர் சோழன் சார்பில் திருமுகத்தை வாங்கிக்கொண்டு 'நீ போகலாம்' என்றார்.

[தூதன் போகிறான்]

சோழன் : பெருங்கோ வேளிர் அவர்களே! அந்தச் சிறுவன் என்ன கிறுக்கி இருக்கிறான்? படிக்க முடியுமா?

[படிக்கிறார் முதலில் தூதன் சொன்ன "காந்தளூர் முதலிய வக்கணைகள் வருகின்றன தொடர்ந்து]

காவிரி நாட்டுக் காவலரே! கரிகாலன் திருமாவளவன் தனிப் பெரும் வீரத்தால் பெற்ற, சோழர் குலப்பெரும் புகழைக் கொன்று புதைக்கத் தலையாலங்கானம் தேடிவந்த தருக்கரே! கூர்ஜரம், மாளவம், மகதம், அங்கம், வங்கம், மராடம், முதலிய பல்வேறு நாட்டு நல்வேந்தர் அனைவரையும் படைத்துணைக்கு அழைத்து வராமல், செங்குட்டுவன் பேரைக் கெடுக்கத் தோன்றிய சேரனையும், ஐந்து வேளிர்களையும் மாத்திரம் அழைத்துக்கொண்டு வந்திருப்பதேன்? வீரம்செறிந்த பாண்டியநாட்டில் விருந்தினர் தொகையையும் பகைவர்கள் தொகையையும் கண்டு அஞ்சுவது பழக்கமில்லை என்பதை நீர் அறியீரா? நுமது தனிப்பெரும் வீரத்தைப் பாராட்ட சிறியேன் ஒருவனால் ஆகுமோ ஆகாதோ! ஆனால், பாராட்டிப் பரிசு வழங்கத் துடி துடித்துக்கொண்டிருக்கிறேன்.

நாளைக் காலை ஐந்து நாளிகைக்குள் வீரமுரசம் ஒலிக்க பருந்தும் கழுகும் நாயும் நரியும் புடைசூழத் தலையாலங்கானத்தில்

வாள் நுனியில் உமக்கு வரவேற்பளித்து பருந்துகளுக்கும் நாய்நரிகளுக்கும் உம்மை விருந்தாகப் படைக்கக் காத்திருக்கிறேன். இரவிலேயே திரும்பிவிடாமல் விண்ணுலக வழிமீது வீற்றிருக்க வேண்டுகிறேன்.

ஒப்பம்
**நெடுஞ்செழியன்**

[பெருங்கோவேளிர் திருமுகத்தைப் படித்துவிட்டுத் தூர எறிகிறார்!]

சோழன் : பொடிப்பயல்! எவ்வளவு ஆணவம்? (பல்லை 'நறநற' வென்று கடிக்கிறான்)

சேரன் : அரசே! இத்தனையும் அந்தச் சிறுபையன் செய்வான் என்றா நினைக்கிறீர்கள்? எல்லாம் அந்தப் படைத்தலைவர் உக்கிர வீரபாண்டியரின் வேலை!

சோழன் : எவன் வேலையாய் இருந்தால் என்ன? பொறுப்பு அந்தப் பொடிப்பயல் தானே அரசே?

சேரன் : எய்தவனிருக்க அம்பை நோவதில் என்ன பயன் அரசே?

சோழன் : இருக்கட்டும் படைவீரர்களை ஆயத்தமாக இருக்க ஆவன செய்யுங்கள்!

சேரன் : இந்தப் பஞ்சைகளுக்காகப் படைகள் ஆயத்தமாக இருக்க வேண்டுமா அரசே? நமது கடல்போன்ற படைவீரர்கள் மொத்தமாக எச்சிலை உமிழ்ந்தால் போதாதோ? பாண்டிய நாடே எச்சிலில் மூழ்கிவிடுமே!

[இருவரும் சிரிக்கின்றனர்]

**காட்சி 4.**

காலம் : விடிந்த முதல் நாளிகை.
இடம் : மதுரை அரண்மனை
இருப்போர் : படைத்தலைவர் உக்கிர வீரபாண்டியன், மற்றும் சில படைத்தலைவர், அமைச்சர்கள், புலவர்கள், பாண்டியன் நெடுஞ்செழியன், அவனது தாய், மற்றும் சில அரண்மனைப் பெண்கள்.

வேப்பம்பூமாலையும் உழிஞைக் கொடியும் சேர்த்துக் கட்டிய ஒளிவீசும் மணிமகுடம் தலையை அலங்கரிக்க, மார்பில், கவசத்தின் மேல் மணிப்பதக்கங்கள் அணிசெய்ய, தோளில் பூட்டிய வாகு வலயம் சுடர்உமிழ, இடுப்பில் வரிந்துகட்டிய கச்சையின்மேல் வடிவாள் உறையுடன் ஊசலாட, போர்க்கோலத்துடன் படைத் தலைவர்கள் புடைசூழ, சேடியர் வெண்கவரி வீச, வெண்கொற்றக் குடை ஏந்தி வீரன் ஒருவன் பின்னால் வரப் பாண்டியன் நெடுஞ் செழியன் அவனுடைய தாய் அரச மாதேவி இருக்கும் அரண் மனைக்குள் நுழைகிறான். அரசமாதேவியைச் சுற்றி இருந்த அரண்மனைப் பெண்கள் அவனது வருகையைக் கண்டு எழுந்து வணக்கம் செலுத்தி ஒதுங்கி நிற்கின்றனர். தனித்திருந்த அரச மாதேவியின் கால்களில் விழுந்து வணங்கினான்.

அரசி : (மைந்தனை ஆதரவுடன் தூக்கி) கண்ணே! என்னடா இது போர்க் கோலம்?

படைத்தலைவர் : தேவி! இரு பெரும் வேந்தரும் ஐம்பெரும் வேளிரும் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து வந்துள்ளனர்.

அரசி : பாண்டி நாட்டின்மீது படை எடுப்பு! படை பலவென்ற பாண்டி நாட்டுத் தளபதி உக்கிரவீர பாண்டியர் உயிருடன் இருக்கும்போதே படையெடுப்பு! என்னால் நம்ப முடியவில்லையே உக்கிரவீரரே!

படைத்தலைவர் : நம்ப முடியாதுதான் தேவி! நம்ப முடியாததுதான்! ஏழு பேர் கூடி ஒரு நாட்டின் மீது படையெடுப்பது; நம்பமுடியாததுதான்! உக்கிரவீர பாண்டியன் கிழவனாகி விட்டான்! அதிலும் ஒருத்தன்—என்ன செய்வான்—என்கிற ஊக்கம்! இங்கே ஓர் இளஞ்சிங்கம் இருப்பது, இனிமேல்தானே தெரியும் அவர்களுக்கு!

அரசி : யாரைச் சொல்கிறீர்? இளஞ்சிங்கம் என்று பாண்டியரே!

படைத்தலை : ஏன்? நமது அரசரைத்தான் தேவி!

அரசி : ஐயோ! இவன் என்ன தெரிந்தவன்! பச்சை மண்! அறியாக் குழந்தை! குருவி தலையில் பனங்காயைக் கட்டி வைத்ததுபோல், இவன் தலையில் பாண்டிய நாட்டு அரச பாரத்தைக் கட்டி விட்டிருக்கிறீர்கள்! வாள் வலிமையறிவானா? தோள் வலிமை அறிவானா? என்ன கண்டவன் இவன்—படைத் தலைவரே?

படைத்தலை : தேவி! பொறுத்தருள வேண்டும்! புலியின் வயிற்றில் பூனை பிறக்காது! தங்கள் மணி வயிற்றில் பிறந்த இவர், நீங்கள் கருதுவதுபோல் சாதாரணமாக இருக்க முடியாது! நான் சொல்லுகிற இந்த உண்மையை, இன்று, பொழுதுக்குள் உணர்ந்துகொள்வீர்கள்! நீங்கள் வாழ்த்தி விடை கொடுத்து அனுப்புங்கள் தேவி.

[அரசமாதேவியார் தானே போய் அரண்மனை அறை ஒன்றில் பாதுகாப்புடன் இருந்த நெடிய பெரிய வேல் ஒன்றுடன் வருகிறார். அந்த வேலின் முனையில் தனது வலக்கைப் பெருவிரலைப் பதித்தார். குபு குபு என்று குருதித்துளி சிந்தியது, அந்த விரலாலேயே மகனுடைய நெற்றியில் வீர திலகம் வைத்தார். உச்சி மோந்தார்.]

(10-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் யாராவது இருக்கமாட்டார்களா என்ற எண்ணத்தில் அந்தப் பேதை தன்னால் ஆனமட்டிலும் உரத்த குரல் எழுப்பி "ஐயோ யாரும் இல்லையா?" என்று கத்தினாள்.

தென்னந் தோப்புகளிடையே இருந்து அவளுடைய குரல்தான் மெதுவாக எதிரொலித்ததே தவிர யாரும் "ஏன்' என்று கேட்பாரில்லை.

கார் வலவன் ஒன்றும் தோன்றாமல் சிறிது நேரம் நின்றான், பிறகு அவன் திலோத்தமாவைப் பார்த்துச் சொன்னான் :

"அம்மா, வயலில் யாரும் இல்லை. ஏன் வீணாகச் சத்தம் போடுகிறீர்கள்? சர்வீஸ் பஸ் ஏதாவது வந்தால்தான் உதவி கிடைக்கும்! அதுவரை தயவு செய்து பொறுமையாக இருங்கள்"

"சர்வீஸ் பஸ் எப்போது வருவது? உள்ளே இருக்கும் ஆளுக்கு உயிர் இருக்கிறதா, இல்லையா, என்று கூடத் தெரியவில்லையே"

"அவருக்கு உயிருக்கு ஆபத்து இருக்க முடியாது! 'மைனர் ஆக்சிடண்ட்'தான்"

"மைனர் ஆக்சிடண்டா ?"

"ஆமாம்மா! காரிலேகூட டாப்பும் சயிடும் கொஞ்சம் அடிபட்டு நெளிந்து போச்சு! மற்றப்படி வேறே கோளாறு இராதென்றே நினைக்கிறேன்"

"அட கார் இருக்கட்டுமய்யா! அந்த ஆளுக்கு உயிர் இருக்கா? இல்லையா? ஒன்றுமே தெரியவில்லையே!'

வலவன் காரின் பின்புறக் கதவைத் திறந்து முத்துசாமியை வெளியில் இழுத்தான். திலோத்தமா மிக்க ஆவலோடு கில்லாடியின் மூக்கில் விரலை வைத்துப்பார்த்தாள். மூச்சு இருக்கிறதா இல்லையாஎன்று அவளால் நிச்சயிக்கமுடியவில்லை.

வலவன், முத்துசாமியின் மார்புத் துடிப்பு இருக்சிறதா என்று கைவைத்துப் பார்த்தான். மார்புத் துடிப்பும் தெளிவாக இல்லை. பீதியுடன் திலோத்தமாவைப் பார்த்து :

"மூச்சு இருக்கிறதா ?" என்றான் அவன்

"மார்புத் துடிப்பு இருக்கிறதா? என்றாள் அவள்

"சரியாய்த் தெரியவில்லையம்மா!" என்றான் அவன்

"ஐயோ, மூச்சு வருவதாகவும் தெரியவில்லையே! போச்சோ?" என்று சொல்லிக் கொண்டே அழ ஆரம்பித்தாள். அப்போதுதான் திருப்பத்தூரிலிருந்து மதுரைக்குப்போகும் சர்வீஸ் பஸ் வந்து கொண்டிருந்தது. வலவன் எழுந்துபோய் பஸ்ஸை நிறுத்தும்படி கைகளால் குறிப்புக் காட்டினான். பஸ் நின்றது. அதன் வலவன் வேகமாக இறங்கி வந்து :

"என்ன நடந்தது ஆக்சிடண்டா?" என்று கார் வலவனைக் கேட்டான், அவன் நடந்த விவரங்களைச் சொன்னான்.

உடனே பஸ்ஸிலிருந்த வாலிபப் பிரயாணிகள் அனைவரையும் இறங்கி வரும்படி கேட்டுக் கொண்டான் வலவன், இருபது பேர் கீழே இறங்கி வந்து குடை சாய்ந்துகிடந்த காரை பக்குவமாக நிமிர்த்து வைத்தனர்.

பஸ்ஸில் வந்த தமிழ் வைத்தியரொருவர் கீழே கிடந்த முத்துசாமியின் நாடியைப் பரிசோதனை செய்தார்.

"யாரம்மா இவர்? உங்கள் வீட்டுக்காரரா? ஒண்ணுமில்லை! மயக்கம் தான்! ஊருக்கு எடுத்துப்போய் சிகிச்சை செய்யுங்கள்!" என்று கூறினார்.

வைத்தியர் கூறியது திலோத்தமாவுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது :

"பிழைத்துக் கொள்வாரா ?" என்றாள். அவள் குரலில் பீதியும் படபடப்பும் பின்னிக் கொண்டிருந்தன.

"ஒண்ணும் செய்யாதும்மா! தலையிலே அடிபட்டிருக்கு! இந்தா பாருங்கள் இரத்தம்! என்று கில்லாடியின் தலையில் கசிந்து கொண்டிருந்த இரத்தத்தைக் காட்டினார் வைத்தியர்.

இதற்குள் கார் ஓடத்தக்க நிலையில் இருக்கிறதா என்று அதன் எஞ்சினை ஓட்டிப் பார்த்துவிட்டு இறங்கி வந்தான் வலவன்

காரை நிமிர்த்து வைப்பதற்காக பஸ்ஸில் இருந்து இறங்கிய பிரயாணிகள் கூட்டம் இப்போது கில்லாடியைச் சுற்றிக் கூடியிருந்தது. "ஆள் போச்சோ ?" என்றான் ஒருவன். "என்னமோ!" என்றான் இன்னொருவன். "இல்லை இல்லை சாகலையாம்! மயக்கம் தானும்! அதோ வைத்தியர் சொல்கிறார்" என்றான் வேறொருவன். "மெதுவாக வந்தால்தானே!" என்று அறிவுரை கூறினான் மற்றொருவன். இப்படி ஆளுக்கொருவிதமாகப்பேசிக்கொண்டு கூடி நின்றனர்.

திலோத்தமாவின் வலவன் சொன்னான் :

"அம்மா! காரில் ஒன்றும் கோளாறு இல்லை. ஐயாவைத் தூக்கிக் காரில் வைத்துவிட்டால் வீட்டுக்குப்போய் விடலாம். அங்கே போய் என்ன செய்யவேண்டுமென்று யோசிக்கலாம்" என்றான்.

திலோத்தமா வைத்தியரின் முகத்தைப் பார்த்தாள். "ஆமாம்மா! வீட்டுக்குக் கொண்டுபோய் ஆக வேண்டியதைப் பாருங்கள்' என்றார் வைத்தியர்.

திலோத்தமா சொன்னாள் :

"ஐயா, தெய்வம்போல நீங்கள் இந்தச் சமயத்தில் வந்தீர்கள். தயவு செய்து நீங்களும் என்னோடு காரில் வரவேண்டும். அப்படி வந்தால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும்போல் தெரிகிறது! நீங்களும் மதுரைக்குத் தானே போக வேண்டும் ?"

"சரி வர்ரேம்மா! ஆபத்துக்கு உதவி செய்யாத மனிதன் என்ன மனிதன்!" என்றார் வைத்தியர்.

உடனே கூடியிருந்தவர்களைப் பார்த்து "இளவட்டங்கள் இரண்டுபேர் ஒத்தாசை பண்ணுங்கள். இந்த ஆளைக் காரிலே தூக்கிப்போடுவோம்" என்றார்.

வைத்தியர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான்குபேர் கில்லாடியைத் தூக்கி காரில் கிடத்தினர். திலோத்தமாவும் வைத்தியரும் காரில் ஏறி உட்கார்ந்ததும் கார் புறப்பட்டது.

இரவு 9 மணிக்கு மதுரை தெற்கு மாசி வீதியோரமுள்ள சந்துக்குள்ளிருந்த வீட்டின் முன்னால் போய் கார் நின்றது.

திலோத்தமா இறங்கிப் போய் வீட்டிலிருந்த 50 வயதுக்கிழவியை அழைத்து வந்தாள்.

வலவன் வைத்தியர் அந்தக்கிழவி திலோத்தமா ஆகிய நால்வரும் முத்துசாமியைத் தூக்கிக் கொண்டு போய் வீட்டிலுள்ள கட்டிலில் கிடத்தினர்.

வைத்தியர், அசல் கஸ்தூரி கொஞ்சம் வாங்கி வரச் சொன்னார். கிழவி ஓட்டமும் நடையுமாகப் போய் வாங்கி வந்தாள்.

அதற்குள் வைத்தியர், முத்துசாமியின் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்துத் துடைத்துக் கொண்டிருந்தார்,

கஸ்தூரியை தண்ணீரில் கரைத்து முத்துசாமியின் வாயில் ஊற்றினார். 10 நிமிடங்கழித்து, வெங்காயச் சாற்றை முத்துசாமியின் கண்களில் பிழிந்தார்,

இத்தனை சிகிச்சைகளுக்குப் பிறகு முத்துசாமி முனகிக் கொண்டே கையைக்காலை அசைக்க ஆரம்பித்தான். அவன் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த திலோத்தமாவின் முகத்தில் மகிழ்ச்சி படர ஆரம்பித்தது.

கில்லாடி, மயக்கம் தெளிந்தும் தெளியாமலும் இருக்கும்போதே, திலோத்தமா பத்திரிகை நிருபர்களை அழைத்து வரும்படி கிழவியை அனுப்பினாள்.

பத்திரிகை நிருபர்கள் வந்தனர். அவர்களுக்குத் தடபுடலான உபசாரமும் வரவேற்பும் நடத்தி கில்லாடியும் தானும் புதுக்கோட்டை போனது முதல் வரும் வழியில் கார் விபத்துக்குள்ளானது வரை நடந்த நிகழ்ச்சிகளை சொல்லிமுடித்தாள்.

பத்திரிகை நிருபர்கள் கில்லாடியிடம் ஏதாவது கேட்கலாமா என்று அவனிடம் வந்தனர். அவன் தலையில் பலமான கட்டுகளுடன் மயக்கம் தெளியாத நிலையில் கிடக்கவே அனுதாபத்துடன் பார்த்துவிட்டுச் சென்றனர்.

கில்லாடிக்கு மயக்கம் தெளிய இரண்டு நாளாயிற்று. தினசரி அந்த வைத்தியர் வந்து மருந்து கொடுத்துப் போனார். சிறுக சிறுக குணமாகி வந்தது.

★

கார் விபத்து நடந்த நான்காவது நாள் பகல் ஒரு மணி இருக்கும். புதுக்கோட்டை கீழராசவீதியில் உள்ள புண்ணிய மூர்த்தி ஐயர் இல்லத்தின் முன்புறத்திண்ணையில் சோபாவின் மேல் ஐயர் அமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றிலும் சில வக்கீல்களும் பல்வேறு கட்சிக் காரர்களும் இருக்கின்றனர்.

புண்ணியமூர்த்தி ஐயர் ஒரு பிரபல வக்கீல். காந்தியாரின் திட்டப்படி வக்கீல் தொழிலை வேண்டாமென்று வீசி எறிந்தவர். ஆனால், ஊரிலுள்ள மற்ற வக்கீல்களுக்கு வழக்குகள் தயார் செய்து கொடுத்தல் சட்ட நுணுக்கங்களைக் கற்பித்துக் கொடுத்தல் ஆகிய வகையில் அவர் வக்கீலாக இருந்த போது கிடைத்ததைவிட நல்ல வருமானம் கிடைத்துக் கொண்டிருந்தது.

ஊரிலுள்ள விவசாயிகள் மிராசுதாரர் முதலியவர்கள் கலக்டருக்கோ தாசில்தாருக்கோ போலீசுக்கோ ஏதாவது மனு எழுத வேண்டுமானாலும் ஐயரிடமே வருவார்கள் இதன்மூலம் அவருக்கு ஓரளவு வருவாய் கிடைத்து வந்தது.

இது தவிர ஆங்காங்கு காங்கிரசுப் பொதுக் கூட்டங்களுக்குப் பேச்சாளராகப் போவார், முதல் வகுப்புப் பிரயாணப்படி அனுப்பினால்தான் காந்தீயக் கொள்கைப்படி 3-ம் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டு போய்ச் சேருவார்.

இப்படி அவர் மறைமுகமாக வக்கீல் தொழில் செய்து வருமானம் செய்து கொண்டிருந்தாலும் பொதுக் கூட்டங்களில், ஸ்ரீமான். புண்ணியமூர்த்தி ஐயர்அவர்கள் கட்சிக்காக-காந்தியின் ஆணைக்காக-வக்கீல் தொழிலையே விட்டொழித்து மாதம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வரும் வருமானத்தையே புறக்கணித்து விட்ட 'மாபெரும் தியாகி' என்று காங்கிரசுக்காரர்கள் பாராட்டுரைகள் கூறி அறிமுகம் செய்வதில் தவறுவதில்லை.

புண்ணிய மூர்த்தி, தூய கதராடை அணிந்து, நெற்றியில் விபூதியைக் குழைத்துப் பூசி, சந்தனப் பொட்டுடன் எந்த நேரமும் காட்சிதருவார். அவருடைய வாடாத சிவந்த மேனியும், வசீகரமான முகமும், நடுத்தர உயரமும், உயரத்திற்கேற்ற பருமனும் நல்ல தோற்றம் அளித்தன. அதோடு அவருடைய வைதிகக் கோலம் அக்கால மக்களை பெரிதும் தன்வயப்படுத்தியதென்றே கூறலாம்.

அப்படிப் பட்ட பெருமைக்குரிய ஐயரவர்கள், நண்பகல் உணவை முடித்துக் கொண்டு அப்போதுதான் திண்ணைக்கு வந்திருந்தார்.

தொடரும்


# வெண்பாப் போட்டி 17.

★

ஈற்றடி

## திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

இறுதி நாள் 15-4-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

# திராவிட நாடு திராவிடருக்கே

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட நாடு திராவிடருக்கே என்ற உன்னதமான உயிர் எனப் போற்றும் இலட்சியத்தை இழித்தும் பழித்தும் பேசியவர்கள் பேசித் தோற்றவர்கள் பேசிக் கொண்டிருப்பவர்கள் பேசப் பழகுபவர்கள் தமிழகத்தில் இன்னும் சிலர் உள்ளனர்.

வடநாட்டிலுள்ள மிகப் பெரிய தலைவர்களும் அரசியல் வித்தகர்களும் மேதைகளும்கூட இந்தத் தரத்தில் இருக்கிறார்கள்! இவர்களுடைய அகில இந்திய மாயையை அகற்றி அந்நியரின் ஆதிக்கம் மறைய திராவிட இனத்தின் இலக்கியப் புகழையும் பெருமையையும் காத்து வளர்த்திடக் கழகம் கூறும் நாட்டுப்பிரிவினை தேவை.

இதனை எதிர்த்தவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் எண்ணிப்பார்க்க மறுத்தவர்கள் இன்று ஏராளமான சான்றுகளைத் தேடித்தருகிறார்கள். கற்பனை என்று கதை கட்டியவர்கள் புதிய காரணங்களைச் சொல்லி திராவிடத் தனியரசின் தேவைகளை வலியுறுத்துகிறார்கள்!

கழகத்தின் உயிர்ப் பிரச்னையில் முன்னோர் காலத்தில் முரண்பட்டு நின்றவர்கள், இப்போது முன்னோடும் தொண்டர்களாக, முன்னணி வீரர்களாக, எதிரிகளிடம் முழங்காலிட்டு மண்டியிடாதவர்களாக இலட்சியப் பணியாற்றுகின்றனர்.

இவர்களையெல்லாம் எண்ணியெண்ணிப் பாராட்டுகிறோம் மகிழ்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியம் நல்லவர்களால் வரவேற்று ஒப்புக் கொள்ளப்பட்டாலும், ஒப்புக் கொள்ள மறுப்பவர்களின் எண்ணிக்கை எதிர்ப்பவர்களின் எண்ணிக்கை இன்னும் இல்லாமல் இல்லை.

எப்போதும் எதிர்த்துக்கொண்டிருப்பவர்களைப் பற்றி கழகத்தவர்க்குக் கவலையில்லை. ஆனால் நேசக்கரம் நீட்டிக் கழகத்துடன் நட்புணர்வு கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தங்களுடைய கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் தவறாமல் கழகத்தின் நாட்டுப் பிரிவினையைக் கொள்கையைக் கண்டித்துப் பேசுகிறார்கள்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு ஒன்று கூற விரும்புகிறேன். விவசாயிகளை தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவதற்கான சித்தாந்தம்தான் இன்று நாட்டுக்குத் தேவையே தவிர, பிரிவினை சித்தாந்தமல்ல. திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை தேவையுமல்ல; திராவிட நாட்டை அடைவது சாத்தியமுமல்ல; ஒரு வேளை திராவிட நாடு பெறுவது சாத்தியமா இல்லையா என்ற அடிப்படையில் தி. மு. கழகத்தினரே விவாதம் நடத்திப் பார்த்திருப்பார்களானால் அண்மையில் அவர்களுக்குள் ஏற்பட்ட பூசல்கூட ஏற்பட்டிருக்காது என்று நினைக்கிறேன்."

கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாணசுந்தரம் என்பவர் குரோம்பேட்டைக் கட்சிக்கிளைத் துவக்க விழாக் கூட்டத்தில் இப்படிப் பேசியிருக்கிறார். (ஜனசக்தி 21-3-61)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை தேவையற்றதென்பதை காரணங்கள் காட்டி விளக்காத கல்யாண சுந்தரம் சாத்தியமில்லை என்று சாதித்திருக்கிறார்.

கழகத்தின் சார்பில் சான்றுகள் கூறி உறுதிப்படுத்திய போதெல்லாம் கவனிக்க மறுத்தவர்கள் பொதுத் தேர்தலில் கூட்டுச்சேர நினைக்கும் வேளையில் இப்படி நிந்தனை செய்கின்றனர்.

திராவிட நாட்டுக்கொள்கைப் பிரச்னையால்தான் கழகத்தில் பூசல் ஏற்பட்டது என்றுகூட கல்யாணசுந்தரம் நினைக்கிறாராம்.

விரும்பி வரவேற்றுப் பேசிய அவரும் அவருடைய கட்சியினரும் பொதுத் தேர்தலில் கழகத்தினை ஏணியாக்கி உயர்ந்துவிட உள்ளூர எண்ணம் வைத்திருப்பார்களோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

கொள்கைப் பிரச்னையாலே பூசல் என்று எவரும் சொல்லாத பொய்க் குற்றத்தினை பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் கல்யாணசுந்தரம் பேசியிருப்பது வேதனைக் குரியதாகும்.

நாடு பிரியாவிட்டால் முன்னேற்றம் ஏற்பட்டுவிடாதுஎன்பதைமுன்னேற்றக் கழகம் பலகாலமாகச் சொல்லி வருகிறது அவைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாத காங்கிரசுக்காரர்களைப் போலவே கம்யூனிஸ்டுத் தலைவரும் சொல்கிறார்.

வடவர் தம் அதிகாரத் திமிர் தென்னவரை அடிமைகளாகத்தான் மதிக்கிறது என்பதை உணரத் தவறியவர்கள் கழகத்தவரின் கவனத்திற்கும் அனுதாபத்திற்கும் உரியவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் கூட்டுறவு வைத்துக்கொள்ளக்கூடாதென்றும், கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஏனைய கட்சிகளுடன் மட்டுமே கூட்டணி சேரவேண்டும் என்று அழைக்கின்ற நேரத்தில் நாட்டுப் பிரிவினையை நட்டாற்றில் நழுவவிடுங்கள் என்ற முறையில் கம்யூனிஸ்டுகள் மிக மிகத் துணிவுடன் பேசுகிறார்கள். அதற்காகப் பாராட்டப்படவேண்டியவர்களே!

"பிரிவினை என்று கூறுகிற இடத்தில் மட்டும் நாங்கள் உங்களுடன் திட்டவட்டமாகச் சேர்ந்து நிற்க முடியாது" என்றும் கல்யாணசுந்தரம் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானையும் அகில இந்தியாவையும் எடுத்துக்காட்டி பிரிவினையைத் தீதென்று கண்டித்த கல்யாணசுந்தரம் குரோம்பேட்டைக் கூட்டத்தில் கழகத்திற்கே முழு நேரத்தையும் ஒதுக்கி வைத்துப் பேசியிருப்பார் போலும்!

திட்டவட்டமாகச் சேர்ந்து நிற்க முடியாதென்று பேசுபவர்களேதான், நாள்தோறும் ஜனநாயக முன்னணி தேவையென்ற முழக்கத்தை அரசியல் கைதிகள் விடுதலை வேண்டும்' முழக்கத்தைக் காட்டிலும் வேகமாக முழங்குகிறார்கள்!

கழகத்தின் இலட்சியத்தைக் கேலி செய்து குறைத்து மதிப்பிடும் கம்யூனிஸ்டுகள் பொதுத் தேர்தலில் தங்களுடைய சொந்தக் கட்சியின் சொகுசான நிலைக்காகத்தான் 'ஜனநாயக முன்னணி' என்ற திரைக்குப்பின்னாலே பதுங்கி வருகிறார்கள் என்று எவரேனும் சந்தேகப்பட்டால் அதிலே தவறில்லையே!

அவர்கள் உண்மையான எண்ணத்தை உரைத்துவிட வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட நாட்டுக் கொள்கையினைப் பற்றி வி. பி. சிந்தன் என்ற கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு உறுப்பினர் பின்வருமாறு எழுதுகிறார்.

"தி. மு. க. வின் பிரகடனப் படுத்தப்பட்ட லட்சியம் நாட்டின் பிரிவினைதான் என்பது உண்மை. இந்தப் பிரிவினை கோசத்தை கம்யூனிஸ்டுகள் என்றுமே ஆதரித்ததில்லை. என்றுமே இது சம்பந்தமான நம் எதிர்ப்பை மறைத்ததுமில்லை. தேசத்தைத் துண்டாடவேண்டுமென்னும் இத்தகைய ஒரு கோரிக்கை சீர்குலைவானது என்றே நாம் நெடுகிலும் கருதி வந்திருக்கிறோம்" (ஜனசக்தி பொங்கல் மலர் 14-1-61)

வடநாட்டு ஆதிக்கத்தை கண்டித்துப் பேசிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் திராவிடநாட்டுத் தேவையை உணர்ந்தவர்கள். கேரளம் புறக்கணிக்கப் பட்டதென்று கண்டன உரை தந்தவர்களும் கம்யூனிஸ்டுகளே! ஆனால் அவர் தம் கரங்களிலே 'அகில இந்தியா, என்னும் பொன் விலங்கு பூட்டப் பட்டிருப்பதால் கழகத்தின் நாட்டுப் பிரிவினை இந்தியாவின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் என்று பயப் படுகிறார்கள்.

"தேசப் பிரிவினையை நாங்கள் ஒப்புக் கொள்ளும் நிலை என்றுமே ஏற்படாது. பிரிவினையை நாங்கள் ஆதி முதலே எதிர்த்து வருவதை தி. மு. க. தலைவர்கள் நன்கு அறிவார்கள். இதை நாங்கள் மறைக்க விரும்பவில்லை. நண்பர்களிடமிருந்தோ அல்லது விரோதிகளிடமிருந்தோ நாங்கள்மறைப்பதற்கு எதுவுமில்லை"-இதனையும் வி.பி. சிந்தன் என்ற விசித்திர மனிதரே விளக்கியிருக்கிறார்.

முன்னேற்றக் கழகத்தவர் தங்களுடைய இலட்சியப் பிரச்னைக்கு எத்தனை மகத்துவம் உள்ளதென்று வாதிட்டாலும் உறுதிசெய்து காட்டினாலும் கம்யூனிஸ்டுகள் எதிர்த்துக் கொண்டேதான் இருப்பார்களாம்!

பொதுத் தேர்தல் கூட்டணி அமைப்பில் பிரிவினையை மறந்துவிட்டுச் சரணாகதியடைய வேண்டும் என்பதுதான் சிந்தனைப் போன்றவர்களின் ரகசிய ஆசையாகும்!

தேர்தல் லாபத்திற்காக சாகத் துணியவேண்டும் என்கிற அந்தத் தோழர்களின் விவாதம் சரியாக விவாதிக்கத்தக்கதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிடப் பிரிவினைக் கொள்கைக்கு மக்கள் மத்தியிலே உள்ள சிறந்த ஆதரவினை பொதுத்தேர்தல் வேட்டையைக் காரணமாக வைத்துப் பங்கிட்டுக்கொள்ள விரும்புகின்ற கம்யூனிஸ்டுகள் பிரிவினைக் கொள்கையை கொன்று புதைத்துவிடவேண்டுமென்று சொல்வது கழகத்தின் தொண்டர்களைத் தொழிலாளத் தோழர்களை மிகவும் எளிதாகமதித்துவிட்டதையே காட்டுகிறது.

வி. பி. சிந்தனைப்போலவே இன்னொரு தோழர் சங்கரய்யா என்பவரும் "தி. மு. க, வின் இறுதி லட்சியமாகிய 'திராவிட நாடு' பிரிவினையைக் கம்யூனிஸ்டுக் கட்சி என்றுமே ஏற்றுக் கொண்டது கிடையாது. அதுபோல் கம்யூனிஸ்டுக் கட்சியின் இறுதி லட்சியமாகிய கம்யூனிச சமுதாயத்தை தி.மு.க ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கூறவும் இல்லை"

(ஜனசக்தி 22-3-61)

நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக நாம் ஒன்றுபடவேண்டும் என்று நல்லதோர் ஜனநாயக முன்னணிப்பாடம் படிக்கின்ற கம்யூனிஸ்டுகள் முன்னேற்றக் கழகத்தவரின் நெஞ்சிலே கத்தி கொண்டு குத்துவதுபோல இப்படித் தினமும் கருத்துக்களைப் பரப்புகிறார்கள். பகைவர்கள் நண்பர்களாவது மிகவும் சுலபமான வேலை ஆனால் நம்மவர்கள் என்று நம்புவது நல்லதல்ல!

கம்யூனிஸ்டுகள் சொல்வது போல பொதுத் தேர்தலின்போது பிரிவினை இலட்சியத்தை வலியுறுத்தாமல் அதனைக் கொஞ்சகாலம் ஒதுக்கி வைத்துவிட்டால் 1962 ஏப்ரலில் முன்னேற்றக் கழகத்தின் நிலை எப்படி இருக்கும் என்பதை இப்போதே எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கம்யூனிஸ்டுக் கட்சியினர் கருதுவது போல 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற இதயகீதம் நம் இலட்சிய நாதம் நடைபெற முடியாத சித்தாந்தம் அல்ல! உருவாகி வளர்ந்திருக்கும் திராவிட மக்களின் உரிமையாகும்!

அறிஞர் அண்ணா அவர்கள் அழகாக அறிவித்திருப்பதுபோல நிறைந்த நாட்டுப் பற்றின் காரணமாக நம்முடைய வரலாற்று மரபு காப்பாற்றப் படவேண்டும் என்ற பண்பாட்டின் அடிப்படையிலே உருவானதுதான் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற இலட்சியக் கொள்கை! வாழ்க திராவிடம்!

**கூடலரசன்**

## பரிசுபத்திர வேட்டை

தமிழ்நாட்டில் 11-3-61 முதல் கடும்புயல் வீச ஆரம்பித்துள்ளது. காற்று மழையோடு கூடிய கடும்புயல் அது. அதுதான் "பரிசுப் பத்திர வேட்டை புயல்.

இன்றுவரை முகத்தையே காட்டாத ஜில்லா கலெக்டர் முதல் அன்றாடம் சந்திக்கும் கிராம அதிகாரிகள் வரை ஒரு கூட்டம். விற்பனை வரி அதிகாரிகள் கூட்டம் ஒருபுறம். பஞ்சாயத்து போர்டு தலைவர்கள், பிளாக் டெவலெப்மெண்ட் தலைமை அதிகாரிகள் முதல் கிராம சேவகி ஈறாக உள்ள மூன்றாவது கூட்டம். இம்மாதிரியான மூன்று கூட்டங்கள் மூன்று திசைகளிலும் இருந்து தோன்றி பரிசுப்பத்திர புயல் உதயம் ஆகி கடுமையாக வீசிக்கொண்டிருக்கிறது. இந்தப் புயலுக்கு பலியானவர்கள், பலியாகிக்கொண்டிருப்பவர்கள் பலர். இந்த புயலிலிருந்து தப்ப வழியின்றி தவிக்கிறார்கள் பொதுமக்கள்.

அதிகாரிகள் நடந்துகொள்ளும் முறையும் பேசும் வார்த்தைகளும் சொல்லத் தரமன்று. மட்டமான கேவலமான, வெட்கப்படும்படியான முறையில் இருக்கிறது. மக்களை மக்களாக நினைக்கவில்லை. மக்களாகவும் மிருகங்களாகவும் மதிக்கிறார்கள். எந்த ஜனநாயக அரசாங்கமும் இம்மாதிரியான முறையில் நடந்ததாக சரித்திரம் கூறவில்லை. துக்லக் ராஜ்யம்கூட இப்படி நடைபெற்றதாக கூறவில்லை. கேள்விப்படவில்லை பிச்சை எடுக்கும் அரசாங்க அதிகாரிகள் பிச்சை எடுக்கிறோம் என்பதை மறந்து தீவட்டிக்கொள்ளைக்காரன்போல் நடந்து கொள்கிறார்கள் இந்த நிலை மாறவேண்டும். எதிர்கட்சிகள் ஒன்றாகக் கூடி இந்த இன்னல்களிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்ற ஆவன செய்தல் வேண்டும்.

க. வே. சீனுவாசன்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

அரசி : என் செல்வமே! தென்னவர் குலவிளக்கே! மாற்றுரை வென்று வாகைசூடி வருவாயாக! இதோ இந்த வேல் உங்கள் முதாதை; வடவாரியப்படை கடந்து, வான்புகழ் கொண்ட நெடுஞ்செழியனுர் கைவேல். இந்த வேல் ஏந்தி நின்ற இடமெல்லாம் வெற்றி கண்டார் அவர் என்று சொல்வார்கள்! இந்த வேல், நீ நிற்கின்றகளமெல்லாம் தோளுக்குத் துணையாக நிற்கட்டும்.

[வேலைக் கொடுக்கிருர்]

படைத்தலை : தேவி! எங்களுக்கும் வாழ்த்தி விடை கொடுங்கள்.

அரசி : (நெடுஞ்செழியனின் வலக்கையைப் பிடித்து படைத்தலைவரின் வலக்கையில் வைத்து) பாண்டியரே! பாண்டியநாடு பகையச்சம் தெரியாமலிருப்பது உமது வாளாண்மையால்! பாண்டியர்கள் குலவிளக்கை உங்கள் கையில் ஒப்படைக்கிறேன். பாதுகாக்க வேண்டியது உமது தலையாய பொறுப்பு!

படைத்தலை : அன்புத்தாயே! அரசமாதேவியரே! எனக்கு இவ்வளவு சொல்லவேண்டுமா? 'எனது கடைசி மூச்சு உள்ள வரை அரசர்மேல் ஒரு துரும்புகூட விழாது தாயே' இது உங்கள்மீது ஆணை!

அரசி : நல்லது பாண்டியரே! சென்று வாருங்கள்! வென்று வாருங்கள்!

## காட்சி 5.

காலம் : விடிந்து பத்து நாளிகை.

களம் : தலையாலங்கானத்துப் போர்க்களம்.

இருப்போர் : பாண்டியன் நெடுஞ்செழியன்; படைத்தலைவர் உக்கிர வீரபாண்டியர்; புலவர் இடைக்குன்றூர் கிழார். ஏனைய படை வீரர்கள்.

சேரசோழர்கள் அவர்தம் படைத்தலைவர் படைவீரர்கள்.

ஐம்பெருவேளிர்கள் அவர்தம் படைவீரர்கள்.

போர் கடுமையாக நடந்துகொண்டிருக்கிறது, பாண்டிய நாட்டுப் படைவீரர்கள், சேரசோழ வேளிர்களின் படைகளை ஆட்டு மந்தைகளை புலிகள் பாய்ந்து அடிப்பதுபோல் வேலாலும் வாளாலும் கண்மண் தெரியாமல் தாக்கிச் சாய்க்கின்றனர்.

காந்தார நாட்டுக்குதிரைகள் பூட்டிய கொடுஞ்சி (மொட்டைத் தேர்)யில், வெண்கொற்றக் குடைக்குமேல் கடல் சிங்கமான சுருமீன் உருவம் பொறித்த வெற்றிக்கொடி படபடவென்று அசைந்தாட கையில் நாணேற்றிய வலிமையான வில் பாணங்களைப் பொழிந்துகொண்டிருக்க பாண்டியன் நெடுஞ்செழியன் இடசாரி வலசாரியாகச் சுழன்று சுழன்று போராடுகிருன். அதுபோலவே உக்கிர வீரபாண்டியரும் போராடுகிருர். சோழர் படைத்தலைவரின் முதல்வன் நெடுஞ்செழியன் அம்புக்கு இரையாகிச் சாய்ந்தான். சேரர் படைத்தலைவரின் முதல்வன், உக்கிரபாண்டியர் எறிந்த வேலாயுதத்தால் உயிர்நீத்தான். இருபெரும் படைத்தலைவரும் பட்டு விழவே, சேரசோழப் படைவீரர்கள் சிதறிப் புறங்காட்டி ஓடத்தலைப்பட்டனர்.

நெடுஞ்செழியன் : பாண்டியரே! எதிரிப்படை முறிந்தோடுகிறதே! என்ன செய்வது?

உக்கிரவீரர் : இந்தப் பாவிகளை ஊர் சேரும்வரை துரத்தித் துரத்தித் தாக்கவேண்டும் அரசே! என்று சொல்லிக் கொண்டே (படைவீரர்களைப் பார்த்து) ஓட ஓட துரத்தித் தாக்குங்கள் ஈவிரக்கம் காட்டாதீர்கள்.

நெடுஞ் : அது போர் நெறியாகாதே பாண்டியரே!

உக்கிரவீரர் : ஒருவர்மீது ஏழுபேர் சேர்ந்து தாக்க வருவது மட்டும் போர் நெறியாகுமா அரசே?

நெடுஞ்செழியன் : அதற்கு நெறிதவறிய சோழனையும் சேரனையும் குறிவைத்துத் தாக்குங்கள் பாண்டியரே! படைவீரர்கள் என்ன செய்வார்கள் பாவம்! சொன்னதைச் செய்பவர்கள்

உக்கிரவீரர் : சோழனும் சேரனும் ஆளுக்கு முந்தி ஓடுகிருர்களே! அவர்களை மட்டும் குறிவைத்துத் தாக்குவது எப்படி அரசே! (சோழசேரப் படைகளை தலைமறையுமட்டும் துரத்தித் துரத்தித் தாக்கிவிட்டு வீரர்கள் வெற்றி முழக்கத்துடன் வருகிருர்கள். வெற்றி முரசம் விண்ணதிர முழங்குகிறது,)

★

# நூல் நயம்

## BOGUS PATRIOTS

### And other poems

**Translated By T. G. Narayanaswamy. M. A.**

பிற மொழி நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பெற வேண்டுமென்ற முயற்சி இந்நாளில் மிகுதியும் வளர்ந்து வருகிறது. பயனுள்ள பல நூல்கள் தோன்றியும் உள்ளன. அதைப் போலவே தமிழ் நூல்களும் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப் பெறுவது பயனுள்ள பணிமட்டுமல்லாது, தமிழ் நெஞ்சம் படைத்தோர் அப்பணியை மேற்கொண்டால் மற்ற மொழியினர் நம்முடைய நிலைமைகளை உணரும் வாய்ப்பு ஏற்படுகிறது. குறிப்பாகப் பண்டைய தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்ப்போர் மொழிக்கும் நாட்டுக்கும் பயனுள்ள சிறப்பான பணியினைச் செய்வோராவர்.

அத்தகைய சீரிய பணியில் ஈடுபட்டுள்ள நண்பர். நாராயணசாமியைப் பாராட்டியே தீரவேண்டும். ஆங்கில அறிவும் தமிழ் இலக்கியத் தேர்ச்சியும் பெற்ற இவருடைய தமிழ்ப் பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பே இந்நூல். இதில் பாரதியார், இராமச்சந்திர கவிராயர், மதுரகவியார், இரட்டையர் அம்பிகாபதி ஆகியோர் பாடல்களிலும், கலிங்கத்துப் பரணி, (கடைதிறப்பு) பட்டினத்தார் பாடல், நந்திக்கலம்பகம், புறநானூறு, குறுந்தொகை முதலியவற்றில் சில பாடல்களையும் தம் மொழி பெயர்ப்புக்குத் தேர்ந்தெடுத்துள்ளார்.

குறிப்பாகப் பாரதியாரின் 'குயில்பாட்டு' (Song of the kuil) சிறப்பாக அமைந்துள்ளது. இடைக்காலப் பாடல்களும் ஆங்கில மொழியில் அவற்றின் சுவை குன்றாமல் நிற்கின்றன.

நந்திக்கலம்பகம். கலிங்கத்துப் பரணி, சங்க இலக்கியங்களைப் பிற மொழிகளில் பெயர்க்கும் பொழுது அதன் உயரிய கருத்தாழம் மிக்க சொல்லாட்சியும், அமைப்பழகும் அமைதல் மிக மிக அருமையாகும். ஆயினும் நண்பர். நாராயணசாமி தனது ஆழ்ந்த ஆங்கில, தமிழ் அறிவினாலும் இலக்கிய வேட்கையாலும் திறமையோடு முயன்றிருக்கிருர் முயற்சி வீண் போகவில்லை.

எடுத்துக்காட்டாகப் புறநானூற்றுப்பாடலான 'சிற்றில் நற்றூண்பற்றி எனத் தொடங்கும் பாடலில் வரும்,

ஓரும் புலிசேர்ந்து போகிய கல்லளைபோல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன்மாதோ போர்க்களத் தானே'

என வரும் அடிகளை,

this the womb
that gave him birth
in love ond pride
Does it not look
Like a rocky cave
where the tiger has stayed
and strode out to hunt
search then
for my valiant son
in yonder field
where the battle rages!"

எனும் வீர வரிகளாலேயே ,A MOTHER OF BRAVE' என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார்.

மற்ற குறுந்தொகைப் பாடல்களும் எல்லாவகையிலும் தரங்குறையாமல் அமைந்துள்ளன.

இத்தகைய பணி வரவேற்கத்தக்க ஒன்று. துணிந்து இம் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்ட நண்பரின் பணி வெல்க; வளர்க; ஆங்கில அறிவு பெற்ற தமிழ் மக்கள் அவருடைய ஆர்வத்துக்கு ஊக்கமளிக்க வேண்டுகிறோம்.

விலை ரூ. 1-00

வெளியிட்டோர்,
**Septic Publications**
**Madras-8.**

(முதற்பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட தமிழ் நிரபாரதிகள் மீது 'கடற்கரை கால் பேஸில்' சிங்களக் குண்டர்கள் 'தாக்குதல்' செய்யப் பாராளுமன்ற மேன்மாடி மீது நின்று பார்த்து இரசித்தவர்!

ஆம், 1947-ம் ஆண்டு, பெரிய சேனநாயகா காலந் தொடங்கி வளர்ந்து வந்த 'சிங்கள ஏகாதிபத்தியம்' தமிழ்ப் பேசுமினத்திற்கு வழங்கி வரும், வரலாற்றிக்குரிய பரிசுகள் இவைதாம்.

இந்த அட்டுழியங்களை எதிர்த்துத் தமிழ் நிலத்தையும் தமிழ் மொழியையும், தமிழர் உரிமைகளையும் பாதுகாக்க உயிர்ப் பலியானோர், சிங்களச் 'சிறீ' எழுத்தினை அழித்துச் சிறைகளை நிறைத்தவர்கள் பன்னூற்றுக் கணக்கானோர். அவர்கள் தியாகம், இலட்சிய வெறி, விடுதலை வேட்கைதான் இன்றைய அறப்போர் வீரர்களுக்கு ஆதர்சமாகஅமைபவை!

முப்பதுஇலட்சம் தமிழர்கள் போராடுகிறார்கள் இன்று! இலங்கையின் வடக்கு-கிழக்கு-மத்திய-மாகாணங்களில், யாழ்ப்பாணத்தில், மன்னாரில், வவனியாவில், மட்டக்களப்பில், திருக்கோணமலையில், மலைநாட்டில் எரிமலை குமுறுகின்றது.

அறப்போர் காட்டுத்தீயாகக் கொழுந்து விட்டெரிகிறது. தமிழ்ப் பேசும் மக்கள், சாதிமத பேதமனைத்தும் மறந்தவராய், ஒன்றுபட்டு இலட்சோபலட்சமாய் விடுதலைப்போரில் - சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஆவேசமாகக் குதித்துள்ளனர்.

"விடுதலைஅல்லதுவீரமரணம்" இதுதான் எங்கள் குறிக்கோள்! கட்சி பேதம் யாவும் கருகி விட்டன. தமிழர் என்ற உடற்சட்டையோடு பிறந்தவரனைவரும், தமிழ்மொழி பேசுவோரனைவரும் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

இதன் பயனாக சிறிமாவோ (காலஞ்சென்ற பண்டார நாயக்காவின் மனைவி) பண்டார நாயகா அரசாங்கம் கதிகலங்குகிறது

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் செயல்பட முடியவில்லையே என்று முதலமைச்சரே 'முகாரி' பாடுகிறார். அரசாங்க அலுவலகங்கள் யாவும் ஓய்ந்துகிடக்கின்றன வேலையின்றி! அரசாங்கம் தமிழ்ப்பேசும் சமுதாயம்மீது கொடிய 'பஞ்சத்தை' ஏவியுள்ளது. மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய பங்கீட்டரிசி வழங்கப்படவில்லை. அதனால் போராட்டம் 'தளர்ந்துவிடும்' என்று அரசாங்கம் கண்டகனவு பொய்த்துவிட்டது. அரசாங்கமே இப்பொழுது உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கிறது. போராட்டம் நாளுக்குநாள் அறப்போர் துரிதகதியில் முன்னேறிக்கொண்டிருக்கிறது.

இந்தப் போராட்டம் ஆரம்பித்த 1961-ம் ஆண்டு மாசித் திங்கள் இருபதாம் நாள் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அட்டுழியத்தால், மக்கள் பிரதிநிதிகள் - பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் உட்படப் பெருந்தொகையானோர் 'போலீஸ்' தாக்குதலுக்குள்ளாகி இரத்தஞ் சிந்தினர்.

அதைத் தொடர்ந்து மட்டக்களப்பில், திருக்கோணமலையில் போலீஸ் அட்டுழியம் மும்முரமானது. அது போதாதென்று கடற்படையும், இராணுவமும் அறப்போர் நடைபெறும் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன.

திருமலையில் கடற்படையினரால் தாக்கப்பட்ட விடுதலை வீரர் பலர். அவர்களிலொருவர்-மகத்தான தியாகி- மூதூர்த் தொகுதி முதலாவது பாராளுமன்ற உறுப்பினர்-தீரர் ஏகாம்பரம் அவர்கள் கடந்த கிழமை அகால மரணமடைந்தார். 1959-ல் தடுப்புக் காவலில் வதைபட்டதன் பயனாகக் கோப்பாய்க் கோமான், தமிழர்தளபதி வன்னிய சிங்கம் அவர்கள் அகால மரணமடைந்தார். இப்பொழுது தீரர் ஏகாம்பரம் மறைந்தார்.

ஆனால் எங்கள் விடுதலை வேட்கை மறையாது என்பது தான் மக்கள் மணிக்குரல்! போராட்டம் நிகழ்கிறது. நிகழும் வெற்றி காணும்வரை!!

தமிழ்ச் சமுதாயப் பிரச்சினை இன்று ஐ. நா. வரை கொண்டு போகப்பட்டுள்ளது. முடிவு...? நாம் யாரையும் எதிர்பார்க்கவில்லை. எமது விடுதலையை நாமே பெறுவோம்!

ஆனால், நீதிதேவதையின் திருமுன்னிலையில் தூய்மையுள்ள அனைவரையும் எங்கள் பக்கம் திருப்ப முயலுவோம். அத்தகையவர்கள் எங்கிருந்தாலும் நமது நண்பர்கள்-உறவினர்கள். இது எங்கள் சீவமரணப் போராட்டம் கடைசித்துளி இரத்தமுள்ள மட்டும் ஈழத்தமிழ் மகன் ஒவ்வொருவனது உயிர்ப்பும் இது தான்-வெற்றி அல்லது வீரமரணம்!

★

## காலித்தனம்

நான் கடந்த 24-3-61 வெள்ளிக்கிழமை அன்று 63-வது வட்டத்தில் நடைபெற்ற அறிஞர் அண்ணு அவர்களின் செவற்பொழிவைக் கேட்டுவிட்டு இரவு ஒன்பதரை மணிக்கு மேல் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு வெளி வராண்டாவுக்கு வந்துக் கொண்டிருக்கும் போது பாபு என்றெருவரும் மற்றும் சிலரும் விடு புகுந்து என்னைத்தாக்கி இழிவாகப் பேசி கத்தியை கொண்டு குத்த முயன்ற போது அன்னை வந்து தடுத்து என் உயிரைக் காப்பாற்றினார்கள். இதற்குள் அவர்கள் ஓடிவிட்டார்கள்,

என்னைத் தாக்கியவர்களைப் பற்றி எனக்கு நன்ருக தெரியும். அவர்கள் காங்கிரசை சேர்ந்த கைக்கூலிகள். அவர்களது தொழிலும் இதுபோன்ற காலித்தனங்கள் செய்வதுதான். இதுபோன்ற கயமைத்தனங்கள் புரிவதற்காகதுவே, காங்கிரசாரால் பராமரிக்கப் படுபவர்கள், அவர்கள் இக்கொடுஞ் செயலை புரியக் காரணம் அங்குள்ள காங்கிரஸ் முக்கியஸ்தர்களின் தூண்டுகோல்தான்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் நாங்கள் முறைப்படி 63 வது வட்ட காங்கிரஸ் கவுன்சிலர் திரு, மதன கோபால் அவர்களிடம் போய்ச் சொன்னோம். அவர் போங்க பார்க்கலாம்: என்று கூறிவிட்டு பேசாமல் இருந்து விட்டார். அதற்குப்பின் எழும்பூர் பகுதி துணைசெயலாளர் திரு. கே. வி, பார்த்தசாரதி (63வது வட்ட தி. மு. க. செயலாளர்) திரு. அ. குப்புசாமி ஆகியவர்களுடன் சென்னை பெரியமெட் காவல் நிலயத்தில் புகார் கொடுத்தோம்.

நிற்க. என்னைப்பற்றி 63 வது வட்ட மக்களுக்கு மிக நன்ருக தெரியும். நான் தி. மு. க. வில் இருப்பது என் அன்னைக்கு விருப்பம் இல்லாததுதான். இருந்தாலும் நான் வெளிப்படையாக கழகநிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளாமல் அடக்கம், ஒழுங்கு, பண்பு, இவைகளுடன் பணியாற்றியதால் ஓரளவு அனுமதித்தார்கள். அப்பேர்பட்ட என்னிடம், ஒரு குற்றமும் செய்யாத என்னிடம் இதுபோன்ற கொடுஞ்செயல் புரிந்ததைக் கண்ட அன்னையின் மனம் மாறியது, அவர்கள் நடத்திய இச்செயல் எனக்கு புதிய உணர்ச்சியை ஊட்டியது, ஆர்வத்தையும், துணிவையும் கொடுத்தது. அதன் விளைவு 63வது வட்டத்து தி. மு. கழக மன்றத்தில் மட்டுமே பறந்த கழகக் கொடி இன்று முதல் எனது இல்லத்திலும் மிகக் கம்பீரமாக பறந்துக் கொண்டிருக்கிறது, இதற்குக் காரணமாக இருந்த அந்தக் கொடியவர்களை வாழ்த்துகிறேன்...

இன்னணம்,
ச. செல்வமணி.


**வீரிய விர்த்தி மாத்திரை**

மித மிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமித போகத்தினுலும், தாது நீர்த்துப் போகுதல் சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்பு தளர்ச்சி, சக்திகுறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, சர்வநாடி நரம்புகளுக்கும் வலுவைக் கொடுக்கவல்ல மிகச் சிறந்த வீரிய மாத்திரை.

24 மாத்திரை புட்டி ரூ. 6-00

**லேபனம் மெழுகு**

குறி: சிறுத்துப் போகுதல்' சுருங்கும் தன்மையடைதல்' தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற்பூசும் மெழுகு.

1 அவுன்சு புட்டி ரூ. 4-00

தேவைக்கு எழுதவும்:
சித்தவைத்திய பண்டிட்
எஸ். வி, ஆர். கண்டர்,
ஆர். ஐ. எம். பி.
இராஜசித்த வைத்தியசாலை
சேலம்-2 (S. I.)



**ஏப்ரல் 15-ம் நாள்**

**தென்றல் இதழ்**

**டாக்டர்.**

**ரா. பி. சேதுப்பிள்ளை**

**அவர்களின்**

வெள்ளி விழா மலராக

**வெளிவருகிறது.**

பன்மொழிப் புலவர்கள் பேராசிரியர்கள் ஆராய்ச்சி வல்லுநர்கள் மற்றும் பல அறிஞர்கள் எழுதுகின்றனர்.

தமிழ்த்தாயின் தவப்புதல்வராம் திரு. சேது அவர்களின் அரிய தமிழ்த் தொண்டு தமிழுலகம் நன்கறிய வேண்டிய ஒன்று.

திரு. சேது அவர்கள் தமிழகத்துப் பெரும்புலவர் வரிசையிலே முதலிடத்தில் வைக்கப்படவேண்டியவர்.

அவர் கற்ற வழக்கறிஞர் கல்வியைப் பயன்படுத்தி இருந்தால் அவரது அறிவாராய்ச்சித் திறம் அந்தக் கல்வியின் துணையால் இணையற்ற செல்வத்தை மலையெனக் குவித்திருக்கலாம்.

ஆனால், அவர் அவ்வழியில் செல்லவில்லை. ஆழங்காணுதற்கரிய தமிழ்ப் பெருங்கடலிலே மூழ்கினர். அங்கு மூழ்கிக் கிடந்த பழம் பெரும் தமிழ்ச் செல்வங்களை அள்ளி அள்ளிக் கொணர்ந்தார். ஏங்கிக் கிடந்த புலவர் குழாம் உவகையுடன் அறிவுப்பசி தணிக்க வரையாத பெருவிருந்து வழங்கினர்.

மங்கி மறைந்த நாட்டுப் பெயர்கள் ஊர்ப் பெயர்களை மாநிலம் வியக்க எடுத்தியம்பினர்.

மன்னர் மரபுகள் மக்கட் பண்புகள் பண்டைத் தமிழகத்தின் சீரிய நிலை பலவும் தெளிவுபடுத்தினர்.

அத்தகைய நல்லார் ஒருவரின் பல்வேறு குணநலன்களையும் செவ்விய வியத்தகுசெயல் நலன்களையும் தமிழ்நாடு நன்கறிந்து போற்றுதல் வேண்டாமா?

அத்தகைய அறிவிக்கும் பணியைத் தென்றல் மேற்கொண்டுள்ளது. பல அரிய கட்டுரைகள் தென்றலில் இடம் பெறுகின்றன.

**விலை 25 காசுகள்**

நிர்வாகி
**தென்றல் சென்னை-6.**




## 17. திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

"எத்தர் உலவா திழிசெய லில்லாது
சித்த மழித்திடும் சீர்கேடும்—மெத்த
இராமலே யென்றும் விடுதலைபெற் றிட்ட
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு."

—இரா. துரை, பி. காம்., தருமபுரி.

கனிவளமும், நீர்வளமும், கற்புநெறி காக்கும்
தனிச்சிறப்பும் தன்னகத்தே கொண்டும்;—புனிதத்
திராவிடத்தில் தீரா வறுமைப்பேய் இந்நாள்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—ம. ச. கருமேனி, சித்தையன்கோட்டை.

விண்முட்டும் மாவின் வெடித்தொழுகும் தீங்கனியை
திண்கர மந்தி திகழ்பலவின்—கண்ணே
விராவிவர வீசும் வியன்வளம் ஈதேயாம்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—மு. மலர்விழி, நெல்லை.

தென்னாடு தில்லியிடம் கையேந்திச் செல்வதா?
'இன்னே தனிநா(டு) இனவழியில் ஒன்றாய்
பெருதுண்ணேம், துஞ்சோம்' எனும்முழக்கம் இன்றே
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—அர. இராசாராமன், வளவனூர்.

இன்பக் கலைகள் இலக்கியங்கள் எம்மவர்க்கு
இன்பப் புதையல் இருந்தமிழே—அன்பால்
சராசரம் போற்றச் சகத்திலங்கி நிற்கும்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—சி. பி. சாமி, ஆர்க்காடு.

தந்நாட்(டு) உணர்வையும் தாய்மொழிப் பற்றையும்
எந்நாளும் தென்னாட்டார் நன்குணர—அண்ணா
பராவிடத் தூவிய பக்குவ வித்தே
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—மு. வில்லவன், திண்டுக்கல்.

அன்புத் திருநாட்(டு) அகம்புறம் நல்லறம்
என்றும் அடுத்தவர்க்குக் கூறும் அரும்பேரும்
மராமரங்கள் சந்தம் மலிகடல் முத்தம்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—திருமாறன், கள்ளக்குறிச்சி.

நெய்வேலி தந்த நிலக்கரியும் நீள் சேலம்
பொய்யாது தந்த கரும்பொன்னும்—மெய்யாம்
இராசையின் மண்வளத்தில் ஏர் தங்கம்; இஃதெல்லாம்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—பீஜகுப்தன், வேம்படித்தாளம்.

வடவர் பிடிதளர்ந்து மாநிலத்தின் ஆட்சி
நடத்துகிற சீர்நமக்கு நேர்ந்தால்—கடனுக்(கு)
ஒராவிடமும் மேனாட்டில் ஓடேந்த வேண்டாம்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—மு. வரதராசன், துறையூர்.

நந்தமிழர் அண்ணாவோ நாட்டின் அமைச்சராய்
செந்தமிழில் ஆட்சி செலுத்துங்கால்—நந்தாத்
திராவிடர் காத்திடும் தேன்சுவை நாடாம்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—கடாரங்கொண்டான், தேவகோட்டை.

மாற்றான் வகுத்த அரசியலால், மாத்தமிழை
வேற்றான் சிதைக்க விடுத்தவரே!—மாற்றான்
இராவிடமாய் ஆக்குவீர்! ஏகுவீர்! இன்றே
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு

—எம். பீட்டர், உப்பிலிபாளையம்.

"முன்னேற்றக் கொள்கை முடிவுடைச் செய்திறன்
தன்னிக ரில்லாத் தனியினம்—இந்நாள்
சிறுரிடத்துமெங் கழகம் சிந்தனையை ஊக்கும்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு

—மதிஒளி, சென்னை-5.

'உள்ளதைக் கூறி உணர்வெழுப்பி நல்லியல்பால்
தெள்ளத் தெளியத் திறனுணர்த்தி—எள்ளி
அராசகத்தால் ஆள்வோரை அன்பால் திருத்தத்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு."

—கண்மணி, சென்னை-6.

வற்றாப் பெருநதிகள், வான்முட்டும் நீள்மலைகள்,
கற்றோர், கவின்மாதர் கற்புநெறி—இற்றை
பராவு திருவோடு பண்புளம் எல்லாம்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—தி. குமாரராசு, சென்னை-1.

கொலைகார ஆட்சியினர்! கோட்சே இனத்தார்!
எலிவீரர் பாழ்வடர்! எல்லாம்—குலையாய்
இராவிடம் ஆம்வரையில் ஏதடா இன்பம்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு?

—கோமதிவீரண்ணா, சித்தையங்கோட்டை.

ஈழத்தில் தோழன் இடருற்றான்; இங்கெனிலோ
பாழ்வடவர் நம்மைப் படுத்துகிறார்—வாழ்வோ
அராவிடமாய் ஆயிற்றே! ஐயோ! இதுவா
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு?

—செல்வம், ராம்நகர்.

ஏயும் இனமழிக்க இந்தி உடல் கொழுத்துப்
பாய்கின்ற போழ்தினிலே பால்வார்க்கும்—பேய்கள்
வராமல் வடிவாளை வீசினால் அன்றே
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—எழில்பாரதி, கீழ்க்கடையம்.

செந்நெல் தலையாட்டும், செவ்வாழை கையசைக்கும்
கன்னல் வணங்கிநிற்கும் காட்சியுண்டு!—இன்னும்
வரால்துள்ளும் வாவிகளும் வான்பொழிலும் காண்பீர்!
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—குமர. நடராசன், மணக்கரை.

மானம் பெரிதெனலும் மாத்தமிழைப் பேணுதலும்
வானம் சிறுக்க வழங்கிடலும்—வானம்
தராதலத்தில் மேம்பட்ட தண்கடல் முத்தும்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—சா. கா. சாகுல்அமீது, சித்நையன்கோட்டை.

சந்தி சிரிக்குதென்று சத்தமிட்டுச் சொல்லிவந்த
அந்திகுறை கண்ணார், அடிக்கின்றார்—தந்தி
வராதா, வயிற்றெரிச்சல், வந்தாலும், நன்றே,
திராவிடத்தில், ஓங்கும், சிறப்பு."

—மு. பி. முகமது, திருப்புத்தூர்.

முத்துப் புகழ்படைத்த முன்னோர் வளர்த்ததமிழ்
கத்தும் கடலடியில், மண்ணடியில்—இசெல்வவளம்
தராதலத்தை வென்ற தமிழ்மேன்மை எல்லாம்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—அவா. இன்பதாசன், சென்னை-1.

நாட்டைச் சிறப்பாக்கும் நல்ல பலதிட்டம்
தீட்டி அரசாளத் தேருமல்—வாட்டும்
அராவிடக் காங்கிரசின் ஆட்சி அழிந்தால்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—பத்மா, சென்னை-12.

ஆரியத்தின் மாயை அறவொழித்துத் திராவிடர்கள்
சீரிய வாழ்வில் திளைத்திருக்க—நேர்மை
பராவுகின்ற அண்ணா படைவீரர் காண்பீர்!
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—இரா. செல்வன், பீமநகர்.

மண்ணில் பகைமாய்த்து வந்த விருந்தோம்பி
பண்பும் அறஞ்சேர் படைமறமும்—எண்ணில்
அராவும் அரம்போல் அயலார்முன் நின்றால்
திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

—பொருளரசன், அரியமங்கலம்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 88510.